ஞானம் — யோகம் — தூய்மை — சாந்தி

# பட விளக்கம்




பிரஜாபிதா பிரம்மாகுமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்தியாலயம்




பலவிதமான வாழ்க்கைப் பிரச்சனைகளையெல்லாம் மக்கள் இன்று தீர்த்து விடுகிறார்கள். அதற்கான பரிசும் பெறுகிறார்கள். ஆனால் நான் யார் என்ற சிறியதொரு புதிருக்கோ யாருக்குமே சரியான விடை தெரியாது. நாள் முழுவதும் "நான்" "நான்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி 'நான்' என்று சொல்வது யார்? என்று கேட்டால் "நான் கோபாலன்" என்றோ "நான் ராதாகிருஷ்ணன்" என்றோ பதில் சொல்லுவார்கள். உண்மையில் இவ்வுடலின் பெயர்தான் அது. ஆனால் இவ்வுடலோ என்னுடையது "நான்" இவ்வுடலிருந்து வேறுப்பட்டவன். இச்சிறிய வேறுபாட்டைத் தெரிந்து கொள்ளாத காரணத்தால்தான் இன்று மனிதன் தேகப்பற்றுடன் இருக்கிறான். இதனால்தான் எல்லோருமே இன்று காமம், குரோதம் போன்ற தீய குணங்களுக்கு ஆட்பட்டு துன்பப்படுகின்றனர்.

மக்களிடையே இன்று அகங்காரமும் கர்வமும் நிறைந்திருக்கிற காரணத்தாலேயேதான் பெரிய செல்வந்தன் என்றோ, உயர்ந்த உத்தியோகஸ்தன் என்றோ பெருமிதத்தோடு கூறிக்கொள்கின்றனர். "தன்னைப்பற்றி" தெரிந்திராத காரணத்தால் அவரிடம் அஞ்ஞானமே நிறைந்து காணப்படுகிறது. நான் எப்படி இந்த நாடகத்தில் வந்தேன்? எங்கிருந்து வந்தேன்? எப்போது, எந்த சுகமும், சாந்தியும் நிறைந்த ராஜ்ஜியத்தை நான் இழந்துவிட்டேன்? இச்சிருஷ்டியை ஏற்படுத்திய "பரமபிதா பரமாத்மா யார்?" இந்த விஷயங்களை அறிந்தவர் இதுநாள் வரை யாருமிலர். வாழ்க்கையின் இப்புதிரைப்பற்றி அறிந்து கொண்டு மனிதன் மறுபடியும் ஆத்ம அபிமானியாகலாம். இதன் பயனாக புருஷருக்கு ஸ்ரீ நாராயண பதவியும், ஸ்திரிகளுக்கு ஸ்ரீ லட்சுமி பதவியும் கிடைக்கிறது; பரிபூரண தூய்மையும் சுகமும், சாந்தியும் அடைய முடிகிறது.

இவ்விளக்கங்களை இனிவரும் பக்கங்களில் தெளிவோடு காணலாம்.

## படவிளக்கம்

மன நிம்மதியிழந்து வருந்தும்போது கடவுளே" காப்பாற்று; கடைக்கண் பார்த்தருள் வாயாக; சாந்தியைக் கொடு பிரபு!" என்றெல்லாம் மனிதன் பகவானை அழைக்கின்றான். பஞ்ச விகாரங்களில் மூழ்கிக் கிடக்கும் மனிதர்கள் விகாரமென்னும் விஷத்தினை நீக்கிவிடு தேவனே! அவற்றிலிருந்து எம்மைக் காப்பாற்றுங்கள் என்றும் சொல்கிறார்கள். தூய்மையைக் கொடு ஆண்டவா! கெட்டதை நீக்கி விடப்பா! என்றும் கதறுகின்றனர். விகாரங்களையும், கெட்டவற்றையும் ஒழிப்பதற்காகவே மனரங்கி வந்து, ஈஸ்வர ஞானத்தையும் எளிய இராஜயோகத்தையும் பரமாத்மா கற்பிக்கிறார்; அதை அறிந்து கொண்டு பின்பற்றாதவர்களும் இருக்கிறார்கள்; பின்பற்றிச் செல்பவர்களும் உள்ளனர். பரமாத்மா நமக்கு நல்ல வழியைக் காட்டுகிறார். ஆனால் முயற்சி செய்ய வேண்டியவர்கள் நாம் தான். அப்போதுதான் வாழ்க்கையில் உண்மையான சுகமும் சாந்தியும் கிடைக்கும்; சிரேஷ்டமானவர்களாகவும் ஆக முடியும்.

பரமபிதா பரமாத்மாவால் மனித குலத்திற்கு வழங்கப்பட்டுள்ள நல்வழியைக் காட்டும் படங்களும், விளக்கங்களும் இப்புத்தகத்தில் தரப்பட்டுள்ளன. அவற்றைப் படித்து புத்தியில் நிரப்பிக்கொண்டு சிந்தித்தல் நலம். இதைப் படிப்பதால் பல அரிய விலைமதிப்பற்ற ஞான ரத்தினங்கள் கிடைக்கும். அனுபவரீதியாக ராஜ யோகப் பயிற்சியைப் பெற்று, வாழ்க்கையை உயர்த்தி கொள்வதற்காகத் தாங்கள் உலகெங்கிலும் இயங்கி வரும் இந்த ஈஸ்வரிய விஷ்வ வித்தியாலயத்தின் 8500க்கும் மேற்பட்ட கிளை நிலையங்களில் ஏதேனும் ஒன்றினை அணுகி, இலவசமாகப் பயின்று பயனடைவீர்களாக!

## பொருளடக்கம்


1. படவிளக்கம் 3
2. ஆத்மா என்பது என்ன? மனம் என்பது எது? 4
3. மூன்று லோகங்கள் எவை? பரமாத்மாவின் இருப்பிடம் எது? 7
4. ஆச்சரியமான விஷயம் 8
5. சர்வ ஆத்மாக்களுக்கும் பரமாத்மாவே தந்தை 11
6. பரமபிதா பரமாத்மாவும் அவருடைய சிரேஷ்ட காரியமும் 12
7. சிவனுக்கும் சங்கரருக்கும் உள்ள வேறுபாடுகள் 15
8. பரமாத்மாவின் சிரேஷ்ட அவதாரம் 16
9. பெரிய தவறு 19
10. கல்ப விருக்ஷம் 20
11. பிரபுவைச் சந்திப்பதற்கான இனிமையான யுகம் சங்கமயுகம் 23
12. மனிதர்களின் 84 ஜன்ம கதை 24
13. மானிட ஆத்மாவானது 84 லக்ஷம் பிறவிகளை எடுப்பதில்லை 27
14. பிரஜாபிதா பிரம்மாவும் ஜகதம்பா சரஸ்வதியும் 28
15. ஈஸ்வரிய விஷ்வ வித்தியாலயத்தின் தலைமை நிர்வாகிகள் 29
16. சிருஷ்டி-நாடகத்தை ஏற்படுத்தியவர் யார்? 30
17. கலியுகம் இன்னும் குழந்தையல்ல 33
18. இராவணனின் பத்துத் தலைகள் 34
19. மனித வாழ்க்கையின் லக்ஷியம் 37
20. சீக்கிரத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் வருகை 38
21. கீதையை உபதேசித்தவர் யார்? 41
22. ஹிம்சை நிறைந்த யுத்தம் புரிவதற்காக கீதா ஞானம் அளிக்கப்படவில்லை 42
23. தாமரை போன்று வாழும் வழி 45
24. இராஜயோக அடிப்படை விதிகள் 46
25. இராஜயோகத்தின் தூண்கள் 49
26. இராஜயோகத்தால் பெறும் சக்திகள் 50
27. இராஜயோக வழிப்பயணம் 53
28. வித்தியாலய தமிழக கிளை விலாசங்கள் 54


# ஆத்மா என்பது என்ன? மனம் என்பது என்ன?

அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொருவருமே எத்தனையோ தடவை "நான்" "நான்" என்ற வார்த்தையைச் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். தினந்தோறும், நான், எனது என்று சொல்லிக் கொண்டே இருந்த போதிலும், அவ்வாறு 'நான்' என்று சொல்லும் பொருள் எது? அதன் உருவம் என்ன என்பதைப் பற்றி யாருமே தெரிந்து கொள்ள முடியவில்லை. விஞ்ஞான வளர்ச்சியைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். விளங்காத புதிர்களை விஞ்ஞானத்தின் மூலம் விளக்கிவிட்டாலும் கூட நான் என்று சொல்வது எது? என்பதைப் பற்றிய உண்மை தெரியாது; அதாவது பிறவற்றைப்பற்றி தெரிந்து கொள்பவர் தன்னைப்பற்றி சரியான ரீதியில் அறிவதில்லை. நீங்கள் யார்? உங்களுடைய அறிமுகம் என்ன? என்று கேட்டால் உடனே தன் உடலின் பெயரையும், செய்யும் தொழிலையுமே கூறுகிறோம்.

உண்மையில் "நான்" என்ற சொல் உடலிலிருந்து வேறுபட்ட, ஞானமுள்ள, ஆத்மாவையே குறிக்கும். ஆத்மாவும், உடலும் சேர்ந்த மனிதன் ஜீவாத்மா ஆகிறான். உடலானது பஞ்ச தத்துவங் கள் என்று சொல்லப்படும். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பவைகளால் ஆனது. சிந்தனை சக்தியும் தீர்மானிக்கும் சக்தியும் ஆத்மாவில் உள்ளன. செய்யும் காரியங்களைப் பொறுத்து சம்ஸ்காரங்கள் அமைகின்றன.


ஆத்மா அழியாதது; ஜோதிமயமானது; புள்ளி வடிவமானது; மனித உடலில் புருவங்களுக்கு மத்தியில் மூளைப்பகுதியில் வாசம் செய்கிறது. இரவு நேரத்தில் ஆகாயத்தில் தெரியும் நட்சத்திரம் மின்னுவதைப் போலவே ஆத்மாவும் திவ்யமான பார்வைக்குப் புள்ளி வடிவத்தில் தெரியும். புருவங்களுக்கு மத்தியில் ஆத்மா வசிப்பதனால் தான் ஆழ்ந்து சிந்திக்கும்போது நெற்றியைத் தேய்த்துக் கொள்கிறான். என் தலைவிதி நன்றாக இல்லை என்று சொல்லும் போது தன்னுடைய நெற்றியைத் தான் தேய்த்துக் கொள்கிறான். பக்தர்கள் கூட நெற்றியில், இரு புருவங்களுக்கு மத்தியில் தான் திருநீறு அணிந்து திலகம் இட்டுக் கொள்கின்றனர். இந்த இடத்தில் இருக்கும் ஆத்மா மூளையுடன் இணைந்து செயல்படுகிறது. மூளை யானது ஆத்மாவின் ஞானேந்திரியங்களுடனும், உடலின் கர்மேந்திரியங்களுடனும் இணைந் திருக்கிறது. ஆத்மாவில் தான் எண்ணங்கள் எழுகின்றன. எண்ணங்கள் மூளையின் மூலமாகப் பரவி பின் செயலாகிறது; சந்தோஷத்தையும், துன்பத்தையும் அனுபவம் செய்வது ஆத்மா தான். தீர்மானம் செய்வதில் புத்தி அடிப்படையாகி விடுகிறது. மனம், புத்தி, ஆத்மாவிலிருந்து தனிப்பட்ட தல்ல, ஆனால் இன்று தன்னைத்தான் மறந்து விட்டுத் தன்னை தேகமாகவும், ஆண், பெண்ணாகவும் வாலிபன், கிழவன் என்றெல்லாம் நினைத்து விட்டது. தேக அபிமானம் தான் துன்பத்திற்கெல்லாம் காரணம். இவ்வுடல் மோட்டார் காரைப்போன்றது. இதன் டிரைவர் ஆத்மா. டிரைவர் காரை இயக்குவது போல ஆத்மாவும் இவ்வுடலை இயக்குகின்றது. டிரைவர் இல்லாத காரைப் போன்று ஆத்மா இல்லாத உடல் உபயோக மற்றது. தன்னைத் தான் ஆத்மா என்று நினைத்த பிறகுதான் தான் அடைய வேண்டியதை அடைவதற்காக, ஒருவனால் முயற்சி செய்ய முடியும் என்று ஆத்மாக்களின் தந்தையான பரமாத்மா கூறுகிறார். நன்றாக காரை ஓட்டத் தெரியாத ஒரு டிரைவரால் விபத்துக்கள் ஏற்படும்; காரில் அமர்ந்து வரும் பிரயாணிகளுக்கும் அதனால் துன்பம். இதே போன்று தன்னை ஆத்மா என்று உணராத காரணத்தால் தனக்கும் துன்பம், தன்னைச் சார்ந்தவர்களுக்கும் துன்பம், தான் வருத்தமாக இருப்பதால் தானும் நிம்மதியாக இல்லாமல் மற்றவர்களையும் நிம்மதி இழக்கச் செய்து விடுகிறார்கள். ஆகவே ஒவ்வொருவரும் தான் யார் என்று உணர வேண்டியது மிகவும் அவசியம்.

# நீங்கள் ஓர் ஆத்மா
# YOU ARE A SOUL




மனிதன் கம்யூட்டர் மூலமாக ரோபோட் என்ற இயந்திர மனிதனை இயக்குவதைப்போல,
ஆத்மா, மூளையை உபயோகித்து, உடலை இயக்குகிறது.

Just as a programmer controls a robot through a computer, so a Soul controls the human body through brain.


மூன்று உலகங்கள்
THREE WORLDS
பிரம்மலோகம்
BRAHMALOK
பரந்தாமம்
SOUL WORLD
சங்கர்புரி
SHANKAR PURI
விஷ்ணுபுரி
VISHNU PURI
சூட்சுமலோகம்
SUBTLE WORLD
பிரம்மா புரி
BRAHMA PURI
ஸ்தூல லோகம்
(மனித லோகம்)
CORPOREAL WORLD

# மூன்று லோகங்கள் எவை?
# பரமாத்மா சிவனின் இருப்பிடம் எது?

முக்தியையும், சாந்தியையும் அடைய வேண்டும் என்று மனிதன் விரும்புகிறான். ஆனால் முக்திதாமம் அதாவது சாந்திதாமம் எங்கே இருக்கிறது என்று அவனுக்குத் தெரியாது. அன்பு நிறைந்த பரமாத்மாவைச் சந்திக்க வேண்டும் என்று தான் மனிதன் விரும்புகிறான், அவரை நினைக்கிறான். பரம பவித்திரமான பரமாத்மா வசிக்கும் தூய்மையான இடம் எது என்று அவனுக்குத் தெரியாது. எங்கிருந்து வந்து பரமாத்மா இவ்வுலகில் தோன்றுகிறார் என்பதும் தெரியாது. ஆத்மாக்கள் எங்கிருந்து வந்து, இவ்வுலகம் என்னும் நாடக மேடையில் நடிக்கின்றன என்பதும் மனிதனுக்குத் தெரியாது. எங்கிருந்து வந்தனவோ அந்த அமைதி நிறைந்த வீட்டையும் மறந்து விட்டான். அதனால் மறுபடியும் அந்த வீட்டிற்குப் போகவும் முடியாது.

## 1) ஸ்தூல-மனித வாழ்வு

நாம் இருப்பது ஸ்தூல உலகம். இவ்வுலகில் தான் ஆத்மாக்கள் எலும்பு, சதையால் ஆன உடல் எடுத்து நாடகத்தில் நடிக்கின்றன. இன்ப துன்பத்தையும் அதன் பலனாக அனுபவிக்கின்றன. ஜனன மரணம் என்னும் சக்கரத்தில் வருகின்றன. இவ்வுலகில் எண்ணங்கள் எழுவதும், எண்ணங்களின் ஆதாரத்தில் கர்மங் களைச் செய்து இன்ப துன்பங்களை அனுபவிப்பதும் நடைபெறுகின்றன. இதைத் தான் பஞ்ச தத்துவங் களால் ஆன சிருஷ்டி என்றும், கர்மக்ஷேத்திரம் என்றும் சொல்கிறார்கள். ஆகாய தத்துவத்தின் ஒரு பகுதியாகவே இவ்வுலக சிருஷ்டி அமைந்துள்ளது. இதைத் தலைகீழான மரமாக உருவகிக்கலாம். ஏனெனில் இதன் மூல விதையானவர் பரமாத்மா சிவனே ஆவார். அவர் பிறப்பு இறப்பு அற்றவர். அதிமேலான பிரம்ம லோகத்தில் வசிப்பவர்.

## 2) சூட்சம தேவதை உலகம்

சூரிய சந்திர நட்சத்திரங்களுக்கும் மேலாக, ஆகாய தத்துவத்திற்கும் மேலாக சூட்சும உலகம் இருக்கிறது. ஒளிமயமான உலகில் பிரம்மா, விஷ்ணு, சங்கரருக்கான தனித்தனியான இருப்பிடங்கள் உள்ளன. சூட்சும தேவதைகளான இவர்களின் உடல், எலும்பு, தோலால் ஆனதல்ல. ஆனால் பிரகாசமானது. திவ்யமான, ஞானக்கண்ணால் மட்டுமே காணக் கூடியது. இங்கு துன்பமில்லை, அசாந்தியும் இல்லை. எண்ணங்கள் இங்கு உண்டு: இயக்கம் உண்டு. ஆனால் சப்தமானது எழாது.

## 3) பரலோகம் அல்லது பிரம்ம லோகம்

சூட்சம லோகத்திற்கு மேலாக, ஒரு உலகம் இருக்கிறது. அதை பிரம்ம லோகம், பரலோகம், நிர்வாண லோகம், முக்திலோகம் என்று பல பெயர் கொண்டு அழைக்கிறார்கள். இங்கு செம்பொன் நிறமான ஒளி பரவி இருக்கிறது அதையே பிரம்ம தத்துவம் அல்லது ஆறாவது தத்துவம் அல்லது மகா தத்துவம் என்று சொல்கிறோம். இதன் அம்சமாக ஜோதி பிந்து வடிவமான ஆத்மாக்கள் முக்தியடைந்த நிலையில் இருக்கின்றன. ஒவ்வொரு தர்மத்தைச் சார்ந்த ஆத்மாக்களும் தனித்தனியே பகுதி பகுதியாக இங்கு இருக்கின்றன. இவற்றிற்கும் மேலாக, சதா முக்தி நிலையில் ஞானமுள்ள ஜோதிர் பிந்து ரூபத்தில் பரமாத்மா எனப்படும் சதாசிவனின் இருப்பிடம் இருக்கிறது. கல்பத்தின் கடைசியில், இச்சிருஷ்டியின் அழிவுக்குப்பின், தமது கர்மங் களுக்குத் தகுந்தாற்போல, பலனை அனுபவித்த பிறகு முழு தூய்மையடைந்த நிலையில் ஆத்மாக்கள் இங்கு செல்லுகின்றன. மனித ஆத்மாக்கள் கூட பந்தனம் எதுவும் இல்லாத நிலையில் தான் இருக்கின்றன. இங்கு எண்ணம், செயல் எதுவுமே கிடையாது. பரமபிதா பரமாத்மா சிவனைத் தவிர வேறு எந்த குருவாலும் ஆத்மாக்களை இங்கு கொண்டு செல்ல முடியாது. இந்த உலகத்திற்குப் போவதே உண்மை யில் அமரநாத், ராமேஸ்வரம், காசி முதலிய இடங்களுக்கு ஒப்பாகும். ஏனெனில் அமரநாதராகிய பரமாத்மா சிவன் இங்கு தான் இருக்கிறார்.

# ஒரு ஆச்சரியமான விஷயம்

பரமாத்மாவை எல்லோரும் ஐயனே! அப்பனே! எங்கள் கஷ்டத்தைப் போக்குபவனே! என்றெல் லாம் சொல்லி நினைக்கின்றனர்; அழைக்கின்றனர். ஆனால் அவருக்கும் அழைப்பவர்களுக்கும் உள்ள சத்தியமான, தெளிவான சம்பந்தம் என்ன என்பதை அறிவதில்லை; எனவே அச்சம்பந் தத்தை அவரோடு கொள்ளவும் இல்லை. சரியான அறிமுகமும் அவரிடத்தில் அன்பும் இல்லாத காரணத்தால் அவரை நினைக்கவும் முடியவில்லை. ஏனெனில் மனதை அவரிடம் செலுத்தும் வழி தெரியவில்லை. அதன் விளைவாக அவரிடமிருந்து உரிமையுடன் அடைய வேண்டிய சாந்தியும் சுகமும் கிடைக்காமல் போய் விடுகிறது. பரமபிதா பரமாத்மாவுடன் இனியதொரு சந்திப்பும் ஏற்பட முடியாமல் உண்மையான சுகத்தையும், ஞான ஒளியையும், அருட்சக்தியையும் அடைய இயலாமல் தவிக்கின்றனர். கடவுளை வழிபட்டும் வாழ்க்கையில் எவ்வித மாற்றமும் இல்லாமலேயே வாழ்ந்து வருகின்றனர். ஆகவே மிகவும் அன்பான அந்தப் பரமபிதா பரமாத்மாவின் முழு அறிமுகமும் இங்கு தரப்பட்டுள்ளது. இவற்றை மக்களின் நலனுக்காக அவரே விளக்கிக் கூறியிருக்கிறார். அதை அனுபவத்தில் காண வைத்திருக்கிறார். அனுபவத்தில் காணுமாறு செய்தும் வருகிறார்.

## பரமபிதா பரமாத்மாவின் திவ்யமான திருநாமமும் அவர்தம் மகிமையும்:

பரமபிதா பரமாத்மாவின் பெயர் சிவன், சிவன் என்பதன் பொருள் கல்யாணகாரி, மங்களகாரி, பரமபிதா பரமாத்மாதான் ஞானக் கடல், சாந்திக் கடல், ஆனந்தக்கடல், அன்புக்கடல், அவரே தூய்மையற்றவர்களை தூய்மையாக்குபவர்; அனைத்து ஆத்மாக்களுக்கும் சாந்திலோகத்திற் கும், சுகலோகத்திற்கும் செல்வதற்கான வழியைக் காட்டுபவர். விகாரங்களிலிருந்தும் காலனிடமிருந் தும் விடுவிப்பவர். அனைவரின் பால் கருணை மிகக் கொண்டவர் அவர் ஒருவரே; அவரே திவ்ய புத்தியைக் கொடுப்பவர். திவ்ய திருஷ்டியையும் கொடுப்பவர்; மனித ஆத்மாக்களுக்கு ஞான மென்னும் சோமரசம் அல்லது அமிர்தத்தை அருந்தக் கொடுத்து அமர பதவி அடைவதற்கான வரங்களையும் அருளும் காரணத்தினால் அவர் பெயர் சோமநாதன் என்றும் அமரநாதன் என்றும் ஆயிற்று. அவர் ஜனன மரணத்திற்கு அப்பாற்பட்டு விளங்குபவர். ஆகவே சதா முக்தன்; எப்போதும் ஒளிவீசிக் கொண்டுள்ள அணையாத விளக்கு அவரே. ஆகவே அவரே சதாசிவன்.

## பரமபிதா பரமாத்மாவின் திவ்யமான உருவம்

பரமபிதா பரமாத்மாவின் உருவம் ஜோதி பிந்துவாகும். ஜோதியின் சுடர் போன்ற உருவம், அவ்வுருவமோ நிர்மலமானது; செம்பொன் நிறமானது; மனதைக் கவரக்கூடியது. அந்த சுந்தரத் திருவுருவத்தை திவ்வியமான கண்களால் அதாவது ஞானக்கண்களால் மட்டுமே காண முடியும்; திவ்யமான புத்தியில் தான் காண முடியும். ஜோதி பிந்துவான அந்த அழகுச்சுடரின் ஞாபகமாகவே அவரை சிவலிங்க வடிவத்தில் பூஜை செய்கிறார்கள்; அவர் அவதரித்த நாளை நினைக்கும் நாளாகவே சிவராத்திரியும் கொண்டாடப்படுகிறது.

## நிராகாரத்தின் அர்த்தம்

எல்லா மதத்தினருமே பரமாத்மாவை நிராகாரி என்று மதிக்கிறார்கள்; ஏற்றுக் கொள்கிறார்கள். இவ்வார்த்தையால் அவர்கள் பரமாத்மாவுக்கு ஆகாரம் அதாவது உருவமே இல்லை என்று நினைக்கிறார்கள். அவ்வாறு உருவமே இல்லை என்று சொல்லுவது தவறு என்று பரமாத்மா சொல்லுகிறார். மனித சரீரமும் (ஸ்தூல)அவருக்கு இல்லை. சூட்சும தேவதைகளுக்கு இருப்பதைப் போல் சூட்சும சரீரமும் இல்லை. ஆகவே சரீரம் இல்லாதவர் அசரீரி ஜோதி வடிவானவர், அவர் அணு விலும் சிறிய அணு போன்றவர். இப்படி இருப்பதால் தான் அவர் ஒவ்வொரு அணுவிலும் இருப்பதாகச் சொல்லிவிடுகிறார்கள்.


# நிராகார் பரமாத்மாவும் அவருடைய திவ்ய குணங்களும்
# INCORPOREAL GOD & HIS ATTRIBUTES




இனிமையான குழந்தைகளே! தன்னை ஆத்மா என உணர்ந்து, அனைத்து ஆத்மாக்களின் தந்தையான நிராகார பரம்பிதா பரமாத்மாவான என்னை நினைவு செய்யுங்கள். இதனால் உங்களின் பல பிறவிகளின் பாவங்கள் அழிந்து தூய்மையாகி சத்யுக சுகமான வாழ்க்கையை ஆஸ்தியாக அடைவீர்களாக..... பரம்பிதா சிவ பரமாத்மா

# சகல ஆத்மாக்களுக்கும் தந்தை நிராகாரமான பரமாத்மா ஒருவரே

# SUPREME FATHER OF ALL SOULS




அனைத்து மதத்தைச் சார்ந்தவர்களும் இறைவனை நிராகாரமானவர், அசரீரி (சரீரமற்றவர்) என்றே கருதுகிறார்கள். பரமாத்மாவின் நினைவுச் சின்னமாகிய சிவலிங்கமானது பாரதத்தின் பல இடங்களில் மட்டுமல்லாமல் உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் தென்படுகிறது. பரமாத்மா சிவனே ஆத்மாக்களாகிய நம் அனைவருக்கும் பரம தந்தையாகவும், பரம ஆசிரியராகவும், பரம சத்குருவாகவும் இருக்கின்றார்.

## சகல ஆத்மாக்களுக்கும் தந்தை நிராகாரமான பரமாத்மா ஒருவரே!

இந்துக்களும், முஸ்லீம்களும், சீக்கியர்களும் கிறிஸ்தவர்களும் ஒருவருக்கொருவர் சகோதரர் களே என்பதை எல்லோரும் அறிந்திருக்கின்ற னர்; ஆனால் எந்த விதத்தில் அவர்கள் சகோதரர் களாகிறார்கள் என்பதை அறியமாட்டார்கள். சகோதர சகோதரர்களானால் அவர்கள் அத்தனை பேருக்கும் தந்தை யார் என்பதையும் அறிய மாட்டார்கள். பெற்றோர்கள் தனித்தனியாக இருப் பதால் அவர்கள் சகோதரர்களாக முடியாது. ஆத்மீக அடிப்படையில் அவர்கள் அத்தனைபேரும் ஒரே ஒரு பரமபிதா பரமாத்மாவின் குழந்தைகள் ஆன படியால் அவர்கள் அத்தனை பேரும் சகோதர சகோதரர்கள், இங்ஙனம் ஆத்மீக உறவில் வாழ்ந்தால் நாட்டில் தேசீய ஒருமைப்பாடும் நிலவும்.

எல்லா மதத்தினருக்கும் பரமாத்மா ஒருவரே; அவர் எல்லோருக்குமே தந்தையானவர்; ஆகவே மனிதர்கள் அத்தனை பேரும் சகோதரர்கள் என்று சொல்கிறார்கள். எல்லோருமே ஏற்றுக் கொள்ளக் கூடிய அந்த மேலான பரமபிதா பரமாத்மா யார் என்பது தான் கேள்வி. மதங்களை ஏற்படுத்தி யுள்ளவர்கள் தனித்தனியானவர்கள் தான். இருப்பினும் அவர்களும் ஏதாவது ஒரு விதத்தில் நிராகாரியான ஜோதி சொரூபமான பரமாத்மா சிவபெருமானின் சின்னமான சிவலிங்கத்தை ஏதாவது ஒரு விதத்தில் மதிக்கத்தான் செய்கிறார்கள். பாரத நாட்டில் ஒவ்வொரு இடத்திலும் பரமாத்மா சிவபெருமானுக்குக் கோயில் இருக்கிறது. பக்தர்கள் ஓம் நம சிவாய, அம்மையும் அப்பனும் நீயே "தாயும் தந்தையும் நீயே" என்று புகழ்ந்து பாடி பூஜை செய்கிறார்கள். ஸ்ரீ கிருஷ்ணருக்கும் இஷ்ட தெய்வம் சிவபெருமான்; அந்தத் தேவர்களுக்கும் மேலான தேவன் பரம பூஜ்யரான பரமாத்மா என்பது தெரிந்த விஷயம் தான். பாரத நாட்டிற்கு வெளியிலுள்ள வர்களும் சிவலிங்கத்தை மதித்து வருகிறார்கள். வணங்குகிறார்கள் . படத்தில் சிவபெருமானின் நினைவுச் சின்னமானது எல்லா தர்மங்களிலும் உள்ளது என்பது காட்டப்பட்டுள்ளது.

அமர்நாத், விஷ்வநாத், சோமநாத், பசுபதி நாத் போன்ற இடங்களில் கோயில் கொண்டுள்ள பரமபிதா பரமாத்மா சிவபெருமான் கோபேஷ் வரத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் ஈஸ்வரனை வழிப்பட்ட தகாவும், ராமேஸ்வரத்தில் ஸ்ரீ ராமர் அந்த சர்வேஸ்வரனை வழிபட்டதாகவும் சொல்லப்படுவதால் ஸ்ரீ கிருஷ்ணரும், ஸ்ரீ ராமரும் பூஜிக்கத்தக்க தெய்வம் சிவபகவான் என்று தெரிகிறது. விக்கிரமாதித்த மகாராஜாவும் கூட சிவபிரானையே வணங்கினார். முகம்மதியர்களின் முக்கியமான தீர்த்த ஸ்தலம் மெக்கா; அங்கும் இதைப்போன்ற வடிவமுள்ள கல் ஒன்று உள்ளது. அதை அவர்கள் மிகுந்த அன்புடன் முத்தமிடுகின்றனர். அதை அவர்கள் சங்கே அஸ்வத் என்கிறார்கள். முகம்மதுவினால் அது ஸ்தாபிக்கப்பட்ட தாகவும் மதிக்கின்றனர். எந்த உருவ வழிபாட்டையும் ஏற்றுக்கொள்ளாத முகம்மதியர்களும் கூட இந்தக் கல்லை எதற்காக மதிக்கிறார்கள் என்ற விஷயம் தெரியாது. இத்தாலியைச் சேர்ந்த ரோமன் கத்தோலிக்கர்களும் கூட இதேவிதமான சின்னத்தை தமக்கே உரிய விதத்தில் பூஜிக்கிறார்கள்; கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஏசுகிறிஸ்துவும், சீக்கியதர்ம ஸ்தாபகரான குருநானக்கும் கூட பரமாத்மா ஒரு நிராகாரமான ஜோதி என்பதை ஏற்றுக் கொண்டிருக் கின்றனர். ஜெஹோவாவை பின்பற்றிச் செல்பவர்களும் உள்ளனர். ஜெஹோவாவும் சிவாவும் உச்சரிப்பிலும் ஒன்று போல் உள்ளன. ஜப்பானிலுள்ள புத்தமதத் தினரும் இது போன்ற ஒரு சின்னத்தை தங்கள் முன்னால் வைத்துக் கொண்டு அதைப்பார்த்து மனதை ஒரு நிலைப்படுத்தி தியானம் செய்கின்றனர்.

எல்லா மதங்களைச் சேர்ந்தவர்களும் சிவலிங்கம் என்பது மனித ஆத்மாக்களின் தந்தையாகிய பரமபிதாவின் ஞாபகச் சின்னம் என்பதை மறந்து விட்டிருக்கின்றனர். இவ்விஷயங்கள் தெரிந்திருந்தால் முகமதியர்கள் சோமநாதபுரக் கோயிலைக் கொள்ளையடித் திருக்க மாட்டார்கள்: பாரத நாட்டை பரமபிதா பரமாத்மா அவதாரம் செய்த பூமியாக உணர்ந்து இதையே தமது முக்கியமான தீர்த்த ஸ்தலமாகக் கருதி இருப்பர். இவ்வாறாக இவ்வுலகச் சரித்திரமே வேறு விதமாக இருந்திருக்கும். ஒரு தந்தையை மறந்த காரணத்தால் உலகில் சண்டை களும் சச்சரவுகளும் துன்பமும் கலகங்களும் பிணக்குகளும் அதிகமாகி எல்லோரும் அனாதை களாகி விட்டனர். பாரதமானது ஏழை நாடாகி விட்டது.

# பரமபிதா பரமாத்மாவும் அவருடைய சிரேஷ்ட காரியமும்

ஜோதிர்பிந்து சொரூபமான சிவபிரான் கலியுகக் கடைசியில், தர்மம் அழிந்துவிடும் சமயத்தில், உலக மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்பதற் காகவே முதன் முதலில் சூட்சும தேவதைகளான பிரம்மா, விஷ்ணு, சங்கரனைப் படைக்கிறார். ஆகவே அவருக்கு திரிமூர்த்தி என்று பெயர். மூன்று தேவதைகளைப் படைத்த பிறகு தாமும் மனித உலகத்திற்கு இறங்கி வந்து சாதாரணமான வரும் வயோதிகரும், பக்தருமான ஒருவருடைய சரீரத்தில் அவதரித்து அவருக்கு பிரஜாபிதா பிரம்மா என்று பெயரிடுகிறார்.

பிரஜாபிதா பிரம்மாவின் மூலமாகத்தான் சிவபிரான் மனித ஆத்மாக்களுக்கு தந்தையாக வும், ஆசிரியராகவும் சத்குருவாகவும் இருந்து அன்பையும் அருளையும், ஞானத்தையும் கொடுத்து முக்தியையும், ஜீவன் முக்தியையும் அடையச் செய்கிறார்.

### சங்கரர் மூலமாக கலியுக சிருஷ்டியின் பேரழிவு

கலியுகக் கடைசியில் பிரஜாபிதா பிரம்மாவின் மூலமாக புதியதொரு சிருஷ்டியை ஏற்படுத்தும் போதே பழையதும், அசுரத்தன்மையும் நிறைந்த சிருஷ்டியின் அழிவையும் தொடங்கி விடுகிறார் பரமாத்மா சிவபிரான். சங்கரர் மூலமாக அமெரிக்காவும், ஐரோப்பியர்களும் அணு ஆயுதங்களை அழிவிற்காகவே தயாரிப்பதற்கான தூண்டுதலையும் ஏற்படுத்துகிறார். இதைப்பற்றி மகாபாரதத்தில் பிரம்மா ஸ்திரங்கள் என்ற பெயரில் சொல்லப்பட்டிருக்கிறது. தேகப்பற்றும், தர்மத்திற்கு எதிர்மாறாக காரியங்களை செய்தலும் நிறைந்த விபரீத புத்தியைக் கொண்டர்வகளிடையே (மகா பாரதத்தில் சொல்லப்பட்டுள்ள கௌரவர்கள்) பரஸ்பர உள்நாட்டுக் கலகம் ஏற்படுமாறும் ஆணை யிடுகிறார்.

### விஷ்ணு மூலமாக பாதுகாத்தல்

விஷ்ணுவுக்கு இருக்கும் நான்கு புஜங்களில் இரண்டு புஜங்கள் ஸ்ரீ லக்ஷ்மிக்கு உரியன; இரண்டு புஜங்கள் ஸ்ரீ நாராயணருக்கு உரியன. தூய வார்த்தைகளைப் பேசுதல், ஞான ஒலியினை எழுப்புதல் என்பதை சங்கு விளக்குகிறது. சிருஷ்டி சக்கரத்தைப் பற்றியும் ஆத்மாவைப் பற்றியும் தெரிந்து கொண்டிருப்பதை சுயதரிசன சக்கரம் காட்டுகிறது. இவ்வுலகமென்னும் நீரில் அல்லது சேற்றில் இருந்தாலும் தூய்மையுடன் இருக்க வேண்டும் என்பதைக் காட்டுவதுதான் தாமரை மலர். காமம், கோபம், பந்தபாசம், பேராசை, கர்வம் என்னும் பஞ்சவிகாரங்களை வெற்றி கொள்ள ஞான மென்னும் கதாயுதம் (ஆயுதம்) வேண்டும் என்பதையும் விஷ்ணுவின் அலங்கார ஆயுதங்கள் விளக்குகின்றன. மனித ஆத்மாக்களின் முன்னர் விஷ்ணுவை லட்சியப் பொருளாக வைத்து விஷ்ணுவின் அலங்காரங்களைப் பற்றி ஒவ்வொருவரும் தெரிந்து கொண்டு அவற்றைத் தம்வாழ்வில் பின்பற்றுவதால் ஆண்கள் ஸ்ரீ நாராயணராகவும், பெண்கள் ஸ்ரீ லட்சுமியாகவும் பதவியடைந்து, இரண்டு கிரீடமணிந்த தேவதா பதவியை அடைவார்கள் என்பதை பரமாத்மா விளக்குகிறார். இரண்டு கிரிடங்களில் ஒன்று தூய்மையையும் சாந்தியையும் விளக்கும் ஒளிக் கிரீடம்; இரண்டாவது ரத்தினங்கள் பதிக்கப்பெற்ற தங்கத்தினால் ஆன கிரீடம் செல்வச் சிறப்புக்களை யும் அரசாட்சி செய்யப் பெறும் பாக்கியத்தையும் விளக்குகிறது.


இவ்வாறு, பரமபிதா பரமாத்மா சிவபிரான், சத்திய யுகத்திலும், திரேதாயுகத்திலும் வசிப்பதற்குத் தேவையான தூய்மையினைக் கற்பித்து தெய்வீக சம்ஸ்காரங்களின் மூலமாக சத்தியலோக மென்னும் சொர்க்கத்தை பாதுகாக்கிறார். எனவே சத்திய யுகத்தில் ஸ்ரீ லக்ஷ்மியும், ஸ்ரீ நாராயணரும் (பூர்வ ஜன்மத்தில் பிரஜாபிதா பிரம்மாவும், சரஸ்வதி யுமாவர்) சூரிய வம்சத்தைச் சேர்ந்த மற்ற ராஜாக் களும், பிரஜைகளும் அமைவதற்கான முன்னோடி யான ஸ்தாபனை காரியங்களை இப்போதே செய்கிறார். திரேதாயுகத்தில் வரக்கூடிய ஸ்ரீ சீதையையும், ஸ்ரீ ராமரையும் மற்ற சந்திர வம்ச ராஜாக்களையும் உருவாக்குகிறார். இவ்வாறு படைத்தல்-காத்தல்-அழித்தல் ஆகிய முக்காரியங்களையும் சிவபரமாத்மா செய்து வருகிறார். ஆகவே சிவபெருமானுடனும் பிரஜா பிதா பிரம்மாவுடனும் ஆத்மீக சம்பந்தம் கொண்டு தூய்மையடைவதற்கான ஆத்மீக முயற்சி செய்ய வேண்டும்; உண்மையான வைஷ்ணவர்களாகி, முக்தியையும், ஜீவன் முக்தியையும் அடைவதே ஈஸ்வரிய பிறப்புரிமை என்பதை அறிந்து முழு முயற்சியோடு ஈடுபட வேண்டும்.

# பரமபிதா பரமாத்மாவின் மூன்று திவ்ய செயல்கள்
# THREE DIVINE ACTS OF GOD




| | | |
|---|---|---|
| பிரம்மா மூலம் படைப்பு | விஷ்ணு மூலம் பாலனை | சங்கர் மூலம் வினாசம் |
| CREATION OF RIGHTEOUS WORLD THROUGH **BRAHMA** | SUSTENANCE OF RIGHTEOUS WORLD THROUGH **VISHNU** | DESTRUCTION OF OLD VICIOUS WORLD THROUGH **SHANKAR** |

# பரமாத்மாவின் திவ்ய அவதாரம்
# RE-INCARNATION OF GOD SHIVA







இராஜயோக தியானப் பயிற்சி பெறும் மாணவர்கள் - டைமண்ட் ஹால், சாந்திவன், அபு ரோடு

# பரமாத்மாவின் சிரேஷ்ட அவதாரம்

சிவன் என்னும் பெயருக்கு என்றும் நன்மையே செய்பவர் என்று பொருள். தர்மம் அழியும்போது, ஜீவாத்மாக்கள் பஞ்ச விகாரங்கள் என்னும் மாயையால் கவரப்பட்டு துன்பத்திலும் நிம்மதியில்லா மலும் பாவிகளாகவும் ஆகிவிடும் போது அவர்களை பூரண சுகம் நிறைந்தவர்களாக்கும் நன்மையான காரியம் செய்ய மனம் இரங்குவதால் அவரை கல்யாணகாரி என்கிறோம். பிரம்ம லோகத்தில் வசிப்பவர் சிவபெருமான். தர்மமும் சிரேஷ்ட கர்மமும் அழிந்துவிடும்போது அவற்றைக் காப்பதற்காகவும் கர்மங்களைப்பற்றி விளக்கிக் கூறுவதற்காகவும் பிரம்மலோகத்திலிருந்து கீழே இறங்கிவந்து ஒரு மனிதருடைய உடலைத் தன்னுடைய ஆதாரமாக எடுத்துக் கொள்கிறார். சிவபிரானின் இத்தகைய திவ்யமான பிறப்பைக் கொண்டாடும் ஒரு பண்டிகைதான் சிவஜெயந்தி. அதைத்தான் இன்றும் மக்கள் சிவராத்திரி என்று கொண்டாடுகிறார்கள்.

சாதாரண வயோதிகரின் உடலில் பரமாத்மா அவதரித்து அந்த வயோதிகரின் தூய மனமாற்றத் திற்குப் பிறகு அவருக்குப் பிரஜாபிதா பிரம்மா என்றும் பெயரிடுகிறார். பிரம்மாவைக் கொண்டா டும் பொருட்டு சிவலிங்கத்தின் முன்னர் சிவனு டைய வாகனமாக நந்தி வைக்கப்படுகிறது. சர்வ ஆத்மாக்களின் தந்தையாகவும் தாயாகவும் பரமாத்மா இருக்கும் காரணத்தினால் அவர் தாயின் கர்ப்பத்தில் பிறக்க மாட்டார்: பிரம்மாவின் உடலில் பரகாயப் பிரவேசம் செய்வதை தான் திவ்விய ஜன்மம் எனக்கூறுகிறோம்.

## பிறவிகளுக்கு அப்பாற்பட்ட பரமாத்மா சிவனின் தெய்வீகப் பிறப்பு தனிப்பட்டது

சிவபிரான் எல்லா ஆத்மாக்களுக்கும் தந்தையான காரணத்தினால் அவர் தாய் வயிற்றுப் பிள்ளையாகப் பிறப்பதில்லை. அவரே மனித சிருஷ்டிக்கெல்லாம் சைத்தன்யமான விதை யானவர்: ஜனன மரணம் இல்லாதவர் கர்ம பந்தனங்கள் ஏதும் அற்றவர். ஆனால் அவர் தன்னுடைய வாகனமாக அதாவது தன்னுடைய ரதமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வயோதிகரோ பிறப்பு இறப்பு என்னும் சக்கரத்தில் வருபவர்: கர்ம பந்தனங்களையும் கொண்டவர் அவர் ஜீவாத்மா. ஆனால் பரமாத்மாவுக்கு தனக்கே உரியது என்று சரீரம் எதுவும் எப்பொழுதுமே கிடையாது.

உலகம் முழுவதுமே மாயையின் வலையில் விழுந்து கஷ்டப்படும்போது தூய்மை, சுகம், சாந்தி என்ற வரங்களைக் கொடுத்து, மாயை என்னும் கூட்டிலிருந்து விடுவிக்கின்றார். அவரே நேரில் வந்து ஞானத்தையும் யோகத்தையும் கற்பிக்கிறார். ஆத்மாக்களை பரந்தாமத்திற்கு அழைத்துச் சென்று முக்தியையும், ஜீவன் முக்தியையும் கொடுத்தருளு கிறார். சிவராத்திரி மாசி மாதத்தில் அதாவது விக்கிரம சகாப்தத்தில் கடைசி மாதத்தில் கொண்டாடப்படுகிறது. அப்போது கிருஷ்ண பக்ஷம். சதுர்த்தசி: அமாவாசையாக இருக்கும். இதற்குப் பின்னர் சுக்கிலபக்ஷம் தொடங்குகிறது. அதன் பிறகு புதிய சகாப்தம் தொடங்குகிறது. மாசி மாதத்தில் கிருஷ்ண சதுர்த்தசியைப் போல ஆத்மாக்களும் அஞ்ஞானம் என்னும் இருளில் மூழ்கிக்கிடக்கின்றன. விகாரங்களையும் அசுர லட்சணங்களையும் அடைந்த பின்னர் சிவ ஜெயந்தியினால் புதியதொரு கல்பம் தொடங்குகிறது. அஞ்ஞானத்திற்கும் துன்பத்திற்கும் முடிவு ஏற்பட்டு ஞானத்திற்கும் இன்பத்திற்கும் ஆரம்பயுகமாகின்றது.

சிவபிரான் தம்முடைய ஞானத்தினாலும் யோகத்தினாலும் ஆத்மாக்களிடம் ஒரு விழிப்புணர்ச் சியை உண்டாக்குகிறார். இதை விளக்கும் பொருட்டும் அதனைக் கொண்டாடும் பொருட்டும் மக்கள் சிவராத்திரியின் போது கண்விழிக்கிறார்கள். உபவாசம் (உப = அருகில்) (வாசம் = இருத்தல்) என்பதின் அர்த்தமே பரமாத்மாவின் அருகில் இருத்தல் என்பதாகும்.

அதாவது பரமாத்மாவின் நினைவில் இருத்தல் என்று பொருள்படும். ஆகவே பரமாத்மாவின் அன்பில் மூழ்க வேண்டுமாயின் தூய்மையென்ற விரதம் இருத்தல் வேண்டும்.

# சிவனுக்கும் சங்கருக்கும் உள்ள வேறுபாடுகள்

சிவனும் சங்கரும் ஒருவர்தான் என்று பலரும் நினைக்கிறார்கள். ஆனால் இவ்விருவருக்கும் வித்தியாசம் உண்டு. இருவருடைய நினைவுச் சின்னமும் வெவ்வேறானவை. சிவபெருமானின் நினைவுச் சின்னம் முட்டை வடிவம் அல்லது கட்டை விரல் போன்றது. ஆனால் சங்கர மகாதேவனின் சின்னம் சரீர உருவமுள்ளது. இருவருக்குமுள்ள வேறுபாடுகளைப் பரமபிதா பரமாத்மா கூறியிருக்கிறார். அனுபவத்தில் காணுமாறும் அருள்புரிந்திருக்கிறார். அவை கீழ் வருமாறு:

**சங்கர மகாதேவன்:**

1. இவர், பிரம்மா விஷ்ணுவைப் போன்ற சூட்சுமமான தேகமுடையவர், இவர் மகா தேவன்; ஆனால் பரமாத்மா அல்ல.

2. இவர் பிரம்மாவைப் போலவும், விஷ்ணுவைப் போலவும் சூட்சும உலகத்தில் சங்கருக்கே உரிய சங்கர்புரியில் வசிக்கிறார்.

3. பிரம்மா தேவதா, விஷ்ணு தேவதா போலவே இவரும் பரமாத்மாவினால் படைக்கப்பட்ட ஒரு படைப்பு

4. இவர் மகா அழிவுக்கு (அதர்மத்தின் அழிவுக்கு) நிமித்தமானவர். படைத்தல் காத்தலுக்கு இவர் பொறுப்பல்ல.

**பரமபிதா பரமாத்மா சிவன்:**

1. இவர் சைத்தன்யமானவர், ஜோதிர்பிந்து வடிவானவர்; இவருக்கு ஸ்தூல சரீரமோ, சூஷ்ம சரீரமோ இல்லை. இவர் பரம ஆத்மா.

2. இவர் பிரம்மா, விஷ்ணு, சங்கரர் வசிக்கும் சூட்சும லோகத்திற்கும் மேலே பிரம்மலோகத்தில் அதாவது முக்தி தாமத்தில் வாசம் செய்பவர்.

3. இவர் பிரம்மா, விஷ்ணு, சங்கரர் ஆகிய மூவரையும் படைத்திருப்பதால் இவர் திரிமூர்த்தி ஆவார்.

4. பிரம்மாவின் மூலமாகப் படைத்தலையும், சங்கரர் மூலமாக அழித்தலையும், விஷ்ணு மூலமாக உலகத்தின் காத்தலையும் செய்வித்து உலகத்திற்கே நன்மை செய்யும் கல்யாண காரியாவார்.

**சிவபிரானின் பிறந்த நாள் இரவில் ஏன்?**

இரவு என்பது அஞ்ஞானம்; தமோ குணங்கள் அல்லது பாவகர்மங்கள் நிறைந்தவை என்பதைக் குறிப்பது. துவாபர யுகமும் கலியுகமும் சேர்ந்தது இரவு. கலியுகக்கடைசியில் சாது, சந்நியாசி, குருமார், ஆச்சார்யர்கள் போன்றவர்களும், மனிதர் களும் பாவம் செய்பவர்களாகவும் துன்பப்படு பவர்களாகவும், அஞ்ஞானத்தில் உறங்குபவர் களாகவும் ஆகிவிடும் போது தர்மம் அழிந்து விடுகிறது. இவ்வாறு அனைத்துமே தமோபிரதானம ாகி விடும்போது பரமபிதா திரு அவதாரம் எடுக்கிறார். மற்றவர்களின் பிறந்தநாள் ராத்திரியாக கொண்டா டுவதில்லை. ஆனால் பரமாத்மா சிவனின் பிறந்த நாளோ சிவராத்திரி என்று கொண்டாடப்படு கிறது. படத்தில் காட்டப்பட்டுள்ள இருளானது அஞ்ஞான இருளையும், விகாரம் என்னும் விஷமான குணங்கள் நிறைந்திருத்தலையும் குறிக்கிறது.

ஞான சூரியனான சிவபிரானின் வரவால் சிருஷ்டியின் அஞ்ஞான இருளும், விகாரங்களும் பயந்து ஓடுதல்

திவ்விய ஜன்மம் எடுத்து ஞான ஒளியை ஞான சூரியனான பரமாத்மா கொடுத்தவுடன் மிகக் குறைந்த காலத்தில் ஒளியானது உலகின் எல்லா பக்கங்களிலும் பரவிவிடுகிறது. கலியுகமும், தமோ குணங்களும் இருந்த இடத்தில் சத்தியயுகமும், சாத்வீக குணங்களும் ஸ்தாபிக்கப்படுகின்றன. அஞ்ஞான இருளும் விகாரங்களும் ஓடுகின்றன. கல்பத்தின் இந்த சங்கமயுகத்தில் பரமாத்மாவின் பிறப்பினால் வைசியாலயமாக (விகார குணம் நிறைந்த இடம்) இருந்த சிருஷ்டியானது சிவாலயமாகிவிடுகிறது; ஆண்களுக்கு ஸ்ரீ நாராயணர் என்ற பதவியும், பெண்களுக்கு ஸ்ரீ லட்சுமி என்ற பதவியும் கிடைக்கின்றனர். ஆகவே, சிவராத்திரி வைரம் போன்றதாகும்.

# சங்கரனும் சிவனும் SHANKAR & SHIVA





சூட்சுமலோகவாசி,
அழிவுக்கு ஆதாரமானவர்,
ஆகாரி தேவதா (படைப்பு)

பரந்தாமவாசி, கல்யாணகாரி,
நிராகார் பரமாத்மா
(படைப்பவர்)



# கடவுள் சர்வ வியாபி அல்ல
# GOD IS NOT OMNIPRESENT




கடவுள் சர்வ வியாபி என்பது பாவனையே தவிர உண்மையல்ல

**OMNIPRESENCE OF GOD IS A FEELING NOT A FACT**

# பெரிய தவறு

பரமாத்மாவை ஒருபுறம் தாய்-தந்தையாகவும் பதீத பாவனராகவும் துதிக்கிறார்கள். மற்றொருபுறம் பரமாத்மா எங்கும் நிறைந்திருக்கிறார் என்கிறார்கள். கல்லிலும், முள்ளிலும், குப்பையிலும், பாம்பிலும், தேளிலும், பன்றியிலும், மீனிலும், திருடனுக்குள்ளும் மேலும் கொலைகாரனிடத்தும் கூட இருப்பதாகக் கூறுகிறார்கள். இது எவ்வளவு ஆச்சரியத்திற்குரிய விஷயமாயிருக்கின்றது! பரமபிரியரான, பரமபாவன பரமபிதாவைப் பற்றி அவர் நாயிலும், பூனையிலும் எல்லாவற்றிலும் இருப்பதாகச் சொல்வது எவ்வளவு பெரிய தவறு? முக்தியையும், ஜீவன் முக்தியையும் கொடுத்தருளும் அந்தப் பரமாத்மாவை, தூய்மை யற்றவர்களைத் தூய்மையாக்கி சொர்க்கத்தின் அரசாட்சியைக் கொடுத்தருளும் அந்த அரசர்க்கர சனான அன்புக் கடலை இவ்வாறு வர்ணிப்பது அவர் பெருமையைக் குலைப்பதாகுமல்லவா?

பரமாத்மா எங்கும் நிறைந்தவர் என்றால் அவரை சிவலிங்க வடிவத்தில் வணங்குவானேன்? எங்கும் நிறைந்தவரானால் திவ்வியமான பிறவியை அவரால் எப்படி எடுக்க முடியும்? அவரைப் பிறவி எடுத்து வருமாறு மக்கள் பின்னர் அழைப்பது ஏன்? சிவராத்திரி பண்டிகை கொண்டாடுவதும் ஏன்? எங்கும் நிறைந்தவரால் கீதா ஞானத்தை எப்படிக் கொடுக்க முடியும்? நான் பரம புருஷன்; புருஷோத்தமன்; சூரிய சந்திர நட்சத்திரங்களுக்கும் அப்பால் அவற்றின் ஒளியால் கூட எட்ட முடியாத அளவிற்கு உயர்ந்த பரந்தாமத்தில் வசிப்பவன் நான்; இச்சிருஷ்டியோ ஒரு தலைகீழான மரத்திற்கு ஈடானது. இதன் விதையே நான்; நான் மேலே வசிக்கிறேன் என்று கீதையில் பரமாத்மாவின் மகாவாக்கியங்களும் உள்ளனவே.

பரமாத்மா சர்வவியாபி என்று சொல்வதால் பக்தி, ஞானம், யோகம் போன்ற அத்தனையும் கண்டனத்திற் குரியதாகிவிடுகிறது. ஜோதி சொரூப மான பகவானுக்கு பெயரும், உருவமும் எதுவும் இல்லாவிட்டால் அவரிடம் எந்த சம்பந்தமும் வைக்க முடியாது. அவரிடம் பக்தி இருக்காது. அன்பும் செலுத்த முடியாது; அவருக்கென்று தனிப்பட்ட கடமைகளோ அல்லது அவரைப் பற்றிய சர்ச்சைகளோ எழுவதற்கு இடமே இருக்காது. ஒருவரைப் பற்றி பெயர், உருவம் இருப்பிடம் குணம், கர்மம், சுபாவம், சம்பந்தம், பலன் போன்றவற்றை தெரிந்து கொள்வது தான் ஞானம் என்று சொல்லப்படுகிறது. மன்மனாபவ (மனதை எனக்குக் கொடு) மாமேகம் சரணம் விருஜ் என்னிடம் தஞ்சமடைந்துவிடு. என்ற ஈஸ்வர கட்டளைகளின் அர்த்தத்தைப் பின்பற்றி நடக்காத காரணத்தினால் தான் மக்கள் பகவான் எங்கும் நிறைந்திருக்கிறார் என்று தவறாகச் சொல்லுகிறார்கள். ஒரே ஒருவரும் ஜோதி சொரூபமான தந்தையுமான பரமாத்மாவிடம் மனதை ஒரு நிலைப்படுத்தும் வழி தெரியாத காரணத் தினால் தான் மனதைத் தன் வயமாக்கி அடக்க முடியாமலும், புத்தியை அவரிடம் நிலைப்படுத்த முடியாமலும் மக்கள் துன்பப்படுகின்றனர். பரமாத்மா சைத்தன்யமானவர். சர்வ ஆத்மாக்களின் தந்தை. தந்தையான ஒருவர் எங்கும் நிறைந்திருக்க முடியுமா?

பரமாத்மா எங்கும் நிறைந்தவர் என்று மக்கள் கருதியதால் தான் இன்று யோகம் செய்ய முடியாமல் பாவங்களைச் செய்கிறார்கள். தூய்மை-சுகம்-சாந்தி என்ற பரமாத்மாவின் மழையில் நனைய வழி தெரியாமல் வாடிப்போகிறார்கள்.

இதன் பலனாகத் துன்புறுகின்றனர்; நிம்மதி இழந்திருக்கிறார்கள். அணு அணுவிலும் அவரே நிறைந்திருக்கிறார் என்பதும் தவறு. இதயமானது அன்பின் இருப்பிடம் என்று நினைக்கிறார்கள். துவாபரயுகத்தில் மக்கள் மனதில் பகவான் குடி கொண்டிருந்தார்; அதாவது பக்தி செய்த காரணத்தால் மனதில் நிறைந்திருந்தார். கடவுளை மதித்து வணங்காதவர்களே இருக்கவில்லை. அவ்வளவு பக்தி செய்து வந்தனர் மக்கள். ஆகவே, எல்லோர் மனதிலும் பகவான் இருக்கிறார் என்று சொல்லத் தொடங்கினர். ஆக நினைப்பது வேறு. உண்மை வேறு; மக்கள் தங்கள் மனதில் பகவானை நினைத்த காரணத்தால் ஈஸ்வரனே அங்கு இருந்ததாக நினைப்பது தவறு

# சிருஷ்டி என்னும் தலைகீழான மரமும் அதன் விதை வடிவமான பரமபிதாவும்

இவ்வுலக சிருஷ்டியைப் பரமாத்மா ஒரு தலை கீழான மரமாகச் சொல்லுகிறார். மற்ற மரங்களின் விதைகளை மண்ணில் விதைக்கிறார்கள்; மரம் மேல்நோக்கி வளர்கிறது. மனித சிருஷ்டி என்னும் மரத்தின் விதையான பரமபவித்திரமான பரமபிதா பரமாத்மா பரந்தாமத்தில் இருக்கிறார்.

கலியுகத்தின் கடைசியும் சத்திய யுகத்தின் ஆரம்பமுமான சங்கமயுகத்தைப்பற்றி படத்தில் மரத்தின் அடியில் காட்டியிருக்கிறது. அங்கு வெள்ளை ஆடை அணிந்து பிரஜாபிதா பிரம்மா வும், ஜகதாம்பா சரஸ்வதியும் மற்ற சங்கமயுக பிராமணர்களும் சகஜராஜயோகம் செய்யும் தியானிக்கும் நிலையில் அமர்ந்திருக்கிறார்கள். அஞ்ஞான இருள் சூழ்ந்த சமயத்தில் சிருஷ்டியின் மூல வித்தான பரமபிதா பரமாத்மாவும், ஞானக் கடலுமானவரான, சிவபெருமானுக்கு பவித்திர மான தொரு மனித சிருஷ்டியை உண்டாக்க வேண்டும் என்ற எண்ணம் காரணமாக காரணத்தால் பிரம்மா வின் சரீரத்தில் அவதாரம் செய்து அவருடைய கமலவாய் மூலமாக விலை மதிக்க முடியாத கீதா ஞானத்தையும் சகஜ ராஜ யோகத்தையும் கற்பித்தார். அதன் படி நடந்த ஆண் - பெண்களுக்கு பவித்திர மான பிராமண பிராமணிகளுக்கு **சிவசக்திகள்** என்று பெயர். இச்சிறிய யுகத்திற்கு லீப்யுகம் என்றும் புருஷோத்தமயுகம் என்றும் கீதா யுகம் என்றும் பெயர்.

சத்திய யுகத்தில் ஸ்ரீ லட்சுமி நாராயணருடைய ஆனந்தமயமான, தடங்கல் ஏதுமில்லாத அசைக்க முடியாத ராஜ்யம் இருந்தது. அப்போது பாலாறும், நெய்யாறும் ஓடிற்று; (பாலுக்கும் நெய்யுக்கும் சமமான சக்தியளிக்கும் தூய ஆறு) பசுவும் புலி யும் ஒரே ஓடையில் நீர்குடித்தன. தூய்மை, மணி மகுடம் ஆகிய இரு கிரீடம் அணிந்தவர்கள் ஆட்சி செய்த நாடு பாரத நாடு. அப்போது மக்கள் நோயற்றவர்களாகவும், சுகம் நிறைந்தவர்களாகவும் வாழ்ந்து வந்தனர். காமம், குரோதம் போன்ற விகாரங்கள் இருக்கவில்லை. சண்டை யோ, சச்சரவுகளோ, சாந்தியற்ற நிலைமையோ துன்பமோ அணுவளவுகூட இல்லை. அச்சமயத்து பாரதநாடு சொர்க்கம் என்றும் வைகுண்டம் என்றும் பஹிஸ்து சுகலோகம்) என்றும் சொல்லப்படுகிறது. எல்லோரும் ஜீவன் முக்தர்களாகவும் பூஜிக்கத் தகுந்தவர்களாகவும், 150 வருடத்திற்குக் குறையாத ஆயுள் உடையவர் களாகவும், தேவதாவர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தனர். ஸ்ரீ லட்சுமி, ஸ்ரீ நாராயணர் சூரிய வம்சத்தினர் அவர்களின் 8 வம்சாவளியினர் மகாராஜா மகாராணிகளாக இருந்தனர். அவர்கள் 1250 வருட காலத்திற்கு சக்கரவர்த்திகளாகத் திகழ்ந்தனர்.


திரேதா யுகத்தில் ஸ்ரீ சீதையும் ஸ்ரீ ராமரும் சந்திர வம்சத்தினராகவும் 14 சிறப்புக் கலைப் பெற்றவர் களாகவும் சம்பூர்ண நிர்விகாரிகளாகவும் இருந்தனர். இவர்களுடைய அரசாட்சியைப் பற்றி இன்றும் கூடப்பெருமையாகப் பேசி வருகிறார்கள்

சத்திய யுகத்திலும் திரேதா யுகத்திலும் இருந்த ஆதிசனாதன தேவி தேவதா தர்மத்தின் வம்சமே மனித சிருஷ்டி என்னும் மரத்தின் அடிபாகமாகவும், மூலமரமாகவும் இருந்தது. அதன் பிறகு கிளைகள் என பல தர்மங்கள் கிளம்பின. துவாபர யுகத்தில் தேகப்பற்றும் காம, குரோதம் போன்ற விகாரங்களும் தலைகாட்டின. தெய்வீக சுபாவம் இருந்த இடத்தில் அசுர சுபாவங்கள் இருக்கத் தொடங்கின. அவற்றிலி ருந்து விடுதலை பெறுவதற்காகவே மனிதன் பூஜையையும், பக்தியையும் தொடங்கினான். முனிவர்கள் சாஸ்திரங்களை எழுதினர். யோகம், தவம் போன்றவைகள் தொடங்கின. கலியுகத்தில் மக்கள் பரமபிதா பரமாத்மா சிவனையும் மற்ற தேவதை களையும் பூஜை செய்ததோடு, சூரியன், அரசமரம், அக்கினி, மற்ற ஜடதத்துவங்கள், போன்றவற்றையும் பூஜிக்கத் தொடங்கினர். தேகப்பற்று முற்றிலும் அதிகரித்தது. விகாரம் மிகுந்தது. தூய்மையற்றவர் களாகி விட்டார்கள். உணவுப் பழக்கங்கள், எண்ணங் கள் நோக்கங்கள், மனம், சொல், செயல் இவை கீழானவைகளாகி விகாரங்களுக்கு அடிமையாகி விட்டான் மனிதன். கலியுகக் கடைசியில் மக்கள் தமோபிரதானம் என்னும் மிகத்தாழ்ந்த குண முள்ளவர்களாக, தீய அசுர குணமுள்ளவர்களாக மாறிவிடுகிறார்கள். சாத்வீகம் நிறைந்த சத்யயுகம் திரேதாயுகம், இவற்றுடன் ஒப்பிட்டால் துவாபரயுகமும் கலியுகமும் சிருஷ்டியின் நரகமாகும்.

# கல்ப விருக்ஷம்
# WORLD GENEALOGICAL TREE




பரமபிதா சிவபரமாத்மாவின் அவதாரம்
புருஷோத்தம பிராமணர்களுக்கான சங்கமயுகம்


புருஷோத்தம சங்கமயுகம்
AUSPICIOUS CONFLUENCE AGE
பிரஜாபிதா பிரம்மா குமாரிகள் ஈஸ்வரிய
விஷ்வ வித்யாலயம்
பாண்டவ பவன் (மவுண்ட் அபு)
தில்வாரா கோவில், மவுண்ட் அபு
நரகம்
HELL
சொர்க்கம்
HEAVEN
சங்கமயுகத்தின்
உண்மையான பிராமணர்கள்
அழியாத ருத்ர ஞான யக்ஞம்
ஸ்தாபனை: 1937
LUST
EGO
ATTACHMENT
ANGER
GREED
ஞானம் மற்றும் யோக அக்னி
FIRE OF YOGA & KNOWLEDGE

# பிரபுவைச் சந்திப்பதற்கான இனிமையானயுகம் - சங்கமயுகம்

பாரதத்தில் பல பண்டிகைகள் சிறப்பாக கொண்டாடப்படும் போது புருஷோத்தம மாதம் (மார்கழி) என்றும் ஒன்றை புனிதமாகக் கருதி கொண்டாடுகிறார்கள். ஆத்மீக ஞானத்தைக் கேட்கிறார்கள். புண்ணிய ஸ்தலங்களுக்குப் போகிறார் கள். தான தர்மங்களையும் அம்மாதத்தில்தான் செய்கிறார்கள். அமிர்தவேளையில் எழுந்து நீராடுதலே மிக புண்ணியத்தைக் கொடுக்கும் என்றும் நினைக் கிறார்கள்.

புருஷோத்தமன் என்ற பெயர் பரமபிதா சிவபெருமானுக்கே பொருந்தும். ஆத்மாவின் மறுபெயர் புருஷன் என்பது அவரே பரமாத்மா- பரம புருஷன் அல்லது புருஷோத்தமன் ஆவார். ஏனெனில் ஞானத்திலும், சாந்தியிலும், தூய்மை யிலும், சக்தியிலும் அவர் உத்தமமானவர். கலி யுகக் கடைசியும் சத்தியுக ஆரம்பமும் சேர்ந்த சங்கம யுகத்தின் ஞாபகார்த்த காலம் தான் புருஷோத்தம மாதம். ஏனெனில் பரமபிதா பரமாத்மா அவதரிக்கிற சமயம் அதுதான். சத்யுக ஆரம்பத்திலிருந்து தொடங்கிக் கலியுகக் கடைசி வரையில் ஜீவாத்மாக்கள் ஜனன-மரணத்தில் வருவார்கள். கலியுகக் கடைசியில் சத்தியமான தர்மத்தை மறுபடியும் நிலைநாட்டுவதற்காக பரமபிதா பரமாத்மா வந்து அவதாரம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஞானத்தையும், யோகத்தையும் ஜீவாத்மாக் களுக்குச் சொல்லிக் கொடுத்து, முக்தி தாமத்திற்கு அல்லது பிரம்ம லோகத்திற்கு அழைத்துச் செல்கிறார். மற்ற ஆத்மாக்களையும் மகா அழிவுக்குப் பின் அசரீரிகளாக்கி முக்தி தாமத்திற்குக் கொண்டு போகிறார். ஞான மென்னும் கங்கையில் ஆத்மாக்கள் குளித்து சிவபுரிக்கு யாத்திரை போகின்றன. இந்த ரகசியங்களை அறிந்து கொள்ளாமல் மக்கள் சிவபெருமானுடைய கோவிலுக்கோ, அல்லது விஷ்ணுவின் கோவிலுக்கோ போகிறார்கள். புருஷோத்தம மாதத்தில் பஞ்ச விகாரங்களை நீக்கி விடுவதால் அவர்கள் உத்தம குணம் நிறைந்து மரியாதையும் மதிப்பும் மிக்கவர்களாகி விடுகிறார்கள்.

அதன் பிறகு சத்யயுகம் அல்லது தேவயுகம் அல்லது கிருதயுகம் தொடங்குகிறது. மக்கள் காமம், கோபம், மோகம், பேராசை கர்வம் என்ற இந்தப் பஞ்ச விகாரங்களை தானம் செய்து ஞானமென்னும் கங்கையில் தினமும் நீராடி யோகத்தினால் சரீரத்திலி ருந்து அப்பாற்பட்டு உண்மையான யாத்திரை செய்தால் இவ்வுலகில் மறுபடியும் பரிபூரண சுகமும் சாந்தியும் நிறையும்; சம்பூரணமான சொர்க்கம் என்னும் ராமராஜ்யம் மறுபடியும் ஸ்தாபனை ஆகும். மக்கள் நரகத்திலிருந்து சொர்க்கத்திற்குப் போவார்கள். படத்தில் கூட இவ்விஷயம்தான் விளக்கப் பட்டிருக்கிறது.

பிரஜாபிதா பிரம்மாவும் சரஸ்வதியும் அவர் கமலத் திருவாயின் மூலம் (ஞானப்பிறவி) பிறந்த பிராமண வம்சமும் பரமபிதா பரமாத்மாவுடன் யோகத்தினால் தொடர்பு கொண்டிருப்பது படத்தில் விளக்கப்பட்டிருக் கிறது. இந்த இராஜயோகத்தின் மூலமாகத்தான் மனதிலுள்ள மாசுகள் நீங்கும்; செய்த தீவினைகள் அகலும். சமஸ்காரங்கள் சதோபிரதானமாக மாறும் இவ்வுலக நரகத்தில் வசிக்கும் ஆணும், பெண்ணும் ஞானம், யோகம் என்ற தீ மூட்டி அதில் காமம், குரோதம், மோகம், லோபம், அகங்காரம் என்பவற்றை தீயில் போட வேண்டிய பொருட்களாகப் போட்டு, வேள்வி அல்லது யாகம் வளர்ப்பதைப் படத்தில் பார்க்கிறீர்கள். இம்மகா புனித வேள்வியின் மூலமே மனிதர்கள் என்ற நிலையிலிருந்து தேவர்களாகி அதாவது ஒவ்வொரு ஆணும் ஸ்ரீ நாராணய ராகவும் ஒவ்வொரு பெண்ணும் ஸ்ரீ லட்சுமியாகவும் ஆகி சுகம் நிறைந்த வைகுண்டத்திற்கு அல்லது சொர்க்கத்திற்குப் போகிறார்கள். சொர்க்கத்தின் அதிபதிகளாகவும் ஆகிறார்கள்.

இப்போது நடந்து கொண்டிருப்பது சங்கமயுகம் என்பது நினைவிருக்கட்டும். அது முடிந்தவுடன் கலி யுகத்திலுள்ள சிருஷ்டியில் சொர்க்கம் மலரும். இன்ப உலகமாக மாறும். ஆகவே நாமெல்லோரும் தூய்மையுடனிருந்து ஆண்டவனை இடைவிடா மல் நினைக்கும் யோகிகளாக மாற வேண்டும்.

# மனிதர்களின் 84 பிறவிகளின் அற்புதமான கதை

ஒரு கல்பத்தில் ஒரு ஜீவாத்மாவானது அதிக பட்சமாக 84 ஜன்மங்களை எடுக்கும்; ஆனால் 84 லட்சம் ஜீவராசிகளாகப் பிறக்காது. ஜீவாத்மாக் களின் 84 ஜன்மங்களின் சக்கரத்தைப்பற்றி இந்த படத்தில் 84 படிகளின் மூலமாக விளக்கப்பட்டிருக் கிறது. பிரஜாபிதா பிரம்மாவும் சரஸ்வதியுமே மனித சமூகத்திற்கு முதல் தந்தையும், முதல் தாயும் ஆவார்கள். அவர்களுடைய 84 ஜன்மங்களைப் பற்றித் தெரிந்து கொண்டோமேயானால் அத்தனை ஜீவாத்மாக்களின் கதையையும் தெரிந்து கொண்டாற் போல ஆகிவிடும். பிரஜாபிதா பிரம்மாவும் சரஸ்வதி யும் சங்கமயுகத்தில் ஈஸ்வரிய ஞானத்தையும் யோகத்தையும் கற்று முதன்மையாகத் தேர்ந்த தாலேயே சத்திய யுகத்தின் ஆரம்பத்தில் ஸ்ரீ நாராயணராகவும் ஸ்ரீலட்சுமியாகவும் பதவி அடை கிறார்கள் என்பதை ஏற்கனவே இதற்கு முன்னரும் விளக்கி இருக்கிறோம்.

## சத்திய யுகத்திலும் திரேதா யுகத்திலு மாக 21 ஜன்மத்திற்கான தேவபதவி

சத்தியயுகத்தில் ஸ்ரீ லட்சுமி ஸ்ரீ நாராயணனும் 1250 வருட காலத்தில் 100 சதவீத சுகத்தையும் சாந்தியையும் பரிபூரணமாக அடைந்து 8 ஜன்மங் கள் எடுக்கிறார்கள். இதனால் தான் 8 என்ற எண் சிறந்ததாகக் கருதப்படுகிறது. 8 மணிகள் கொண்ட ஜபமாலையை வைத்துக் கொள்கிறார்கள். 8 தேவதைகளின் பூஜையையும் செய்கிறார்கள். பூஜிக்கத் தகுந்தவர்களாக இருக்கும் இந்த 8 நாராயணீய ஜன்மங்களைப் பற்றி 8 படிகளினால் படத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. திரேதாயுகத்தில் 1250 வருடங்களில் 14 சிறப்புக்களைக் கொண்ட ஸ்ரீ சீதா ஸ்ரீ ராமர் ஆட்சியில் சந்திரவம்சத்தில் பூஜிக்கத் தகுந்த் மதிப்பு கொண்ட ராஜா-ராணியாகவும், அதாவது உயர்ந்த அந்தஸ்தைக் கொண்ட பிரஜைகளாகப் பிறந்து 12 ஜென்மங்கள் எடுக்கிறார்கள். இப்படி ஆரம்பத்தில் சத்திய யுகத்திலும் திரேதாயுகத்திலுமாக 2500 வருடங் களில் பரிபூரணமான தூய்மை, சுகம், சாந்தியுடன் நோயற்ற வாழ்வையும் பெற்று, சங்கமயுக ஞானப் பிறவியையும் சேர்த்து 21 ஜன்மத்திற்கான சுகம் சாந்தியையும் செல்வத்தையும் அடைகிறார் என்று இதனால் தான் சொல்கிறார்கள்.

## துவாபரயுகத்திலும் கலியுகத்திலுமாக 63 ஜன்மங்கள்

சுகத்தை அடைவதற்கான பாக்கியம் தீர்ந்து போய்விட்ட பிறகு அவர்கள் துவாபரயுகத்தின் ஆரம்பத்தில் பூஜாரிகளாக மாறுகிறார்கள். முதன் முதலில் பரமபிதா பரமாத்மா சிவபெருமானை வழிப்பட, வைரத்தினால் சிவலிங்கத்தை ஸ்தாபித்து பூஜிக்கத் தொடங்குகிறார்கள். மிகுந்த பக்தியுடன் மகாராஜா விக்ரமாதித்தர், பூஜாரியாக நின்று சிவபூஜை செய்வதை படம் விளக்குகிறது. நாளடைவில் சூட்சும தேவதைகளான விஷ்ணு, சங்கரர் போன்ற தேவதைகளையும் பூஜிக்கத் தொடங்கிவிடுகிறார்கள். ஆத்மாவைப் பற்றிய மறதியின் காரணமாக நாட்கள் செல்லச் செல்ல அவர்களுடைய ஆரம்ப நிலையான ஸ்ரீ லட்சுமி, ஸ்ரீ நாராயணரையே பூஜை செய்யத் தொடங்கு கிறார்கள். பூஜிக்கத்தகுந்தவர்களாக இருந்த பூஜ்யர்கள் தாமாகவே தம்மைப் பூஜை செய்து கொள்ளத் தொடங்கியதாகச் சொல்லப்படுகிறது. இதன் பிறகு கலியுகம் தொடங்கிற்று. சூட்சம லோகத்தையும் சத்தியலோகத்தையும் சேர்ந்த தேவி-தேவர்களைப் பூஜை செய்ததோடு தத்துவங்களின் பூஜையும் தொடங்கிற்று. இவ்வாறு பக்தியும் பலவித மாயிற்று. சிருஷ்டியானது தமோ பிரதானமாகிவிட்டது. அதாவது சூத்திர கட்டத்தை அடைந்துவிட்டது. இச்சமயத்தில் காமம், குரோதம், மோகம், லோபம் அகங்காரம் என்பது உச்சக் கட்டத்தில் பரவத் தொடங்கிற்று. கலியுகக் கடைசி வரையில் அவர்களும் அவர்களைச் சேர்ந்த வம்சத்தினரும் 63 ஜன்மங்கள் எடுத்தார்கள்.

மேற்கண்ட விளக்கங்களிலிருந்து தெரிவது என்னவென்றால் 5000 வருடங்களில் அவர் களுடைய ஆத்மாவானது 84 ஜன்மங்கள் எடுக்கிறது என்பதே. இப்பழைய, தூய்மையற்ற உலகத்தில் 83 ஜென்மங்களை எடுத்தாகிவிட்டது. இப்போது அவர்களுடைய 84வது கடைசி ஜன்மத்தில் வானப்பிரஸ்தம் எனப்படும் நிலையில் பரமபிதா பரமாத்மா சிவபகவான் அவருடைய பெயரை பிரஜாபிதா பிரம்மா என்றும் அவருடைய கமலத்திரு வாயிலிருந்து வெளியான ஞானத்தினடிப் படையிலான தெய்வீக வாழ்வைக் கடைப்பிடிப்பதன் மூலம் பிறந்த முதல் கன்னிப் பெண்ணின் பெயரை **ஜெகதம்பா சரஸ்வதி** என்றும் வைத்தார். தேவதா வம்சத்தைச் சேர்ந்த ஆத்மாக்கள் எல்லோருமே அதிக பட்சமாக 84 ஜன்மங்களை எடுப்பர். ஜனன மரண சக்கரத்தை 84 ஜன்ம சக்கரம் என்றும், தேவிகள் பலரின் கோவிலில் 84 மணிகள் கொண்ட தேவி என்ற பெயரிலும் இது புகழப்படுகிறது.

# பாரதத்தின் உயர்வும் வீழ்ச்சியும்
# A WONDERFUL STORY OF RISE & THE DOWNFALL OF BHARAT



# மனிதன் வெவ்வேறு ஜீவராசிகளாக பிறப்பதில்லை



HUMAN BEING DOES NOT TRANSMIGRATE IN OTHER SPECIES

# மானிட ஆத்மா 84 லட்சம் பிறவிகளை எடுப்பதில்லை

பரமபிதா பரமாத்மா மற்ற பல ரகசியங்களோடு, மனித ஆத்மாவானது மிருகங்கள் பட்சிகளாகப் போய் பிறக்காது; மறுபடியும் மனிதனாகத் தான் பிறக்கும் என்பதையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார். இது சந்தோஷப் படவேண்டியதொரு விஷயமாகும். ஆனால் ஜீவத்மாவானது 84 லட்ச ஜீவராசிகளாகப் பிறக்கிறது என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள்.

குற்றவாளிகளை தண்டிப்பதற்காக அரசாங்கம் அவர்களுடைய சுதந்திரத்தைப் பறித்துக்கொள்கிறது. சிறையில் அடைத்து வைக்கிறது; சுகங்களை அவர்கள் அனுபவிக்காமல் செய்துவிடுகிறது. அதேபோல் மனிதன் தீயகாரியங்களைச் செய்வானேயானால் மிருகம், பட்சிகளாகப் பிறந்து துன்பமடைகிறான் என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் பரமபிரியமான பரமாத்மா சிவபெருமான், மனித ஆத்மாக்கள் தாங்கள் செய்த கெட்ட காரியங்களுக்கான தண்டனையை மனித ஜன்மம் எடுத்துத்தான் அனுபவிப்பதாகச் சொல்கிறார். விலங்கினங்களை விடக் கொடியவனாக மனிதன் ஆகிவிடுகிறான்; அவற்றைவிட அதிகமான துன்பங்களையும் அனுபவிக்கிறான். ஆனால் பசு-பறவை பட்சி போன்ற ஜீவராசிகளாகப் பிறப்பதில்லை. மனிதன் செவிடனாகவும், குருடனாகவும், நொண்டியாகவும் நோயாளியாகவும் பிச்சைக்காரனாகவும் இருப்பதை நேரிடையாகப் பார்க்கிறோம்; கேள்விப்படுகிறோம். மனிதனை விட அதிகமான சந்தோஷத்தையும் சுதந்திரத்தையும் அனுபவிக்கும் விலங்கினங்களையும் பார்க்கிறோம். அவைகளுக்கு கடை ரொட்டியும், வெண்ணெயும் கூட கிடைக்கின்றன. மெத்தென்ற படுக்கையில் தூங்குகின்றன; காரில் சவாரி செய்கின்றன. மிகவும் அன்புடன் நடத்தப்படுகின்றன. ஆனால் சில மனிதர்கள் உண்ண உணவின்றி, இருக்க இடமின்றி மற்றவர்களிடம் கையேந்தும் போது மற்ற மனிதர்கள் அவர்களை அவமதிக்கிறார்கள். குளிர் காரணமாக நடுங்கியும், நோயினால் வாடுபவர்களும், நடைபாதையில் கிடந்து நாயை விடக் கேவலமாக வாழ்க்கை நடத்துபவர்களும் கூட இருக்கிறார்கள். இதனால் தற்கொலையும் கூட செய்து கொள்கிறார்கள். மனிதனாகப் பிறந்தும் கூட இத்தனை துன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்று இருக்கும்போது அவன் விலங்கினங்களாகவும் பறவைகளாகவும் பிறந்து துன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை.

## விதையைப் போலத்தானே மரமும்?

ஒவ்வொரு ஜீவாத்மாவிலும் ஜன்ம ஜன்மத்திலும் நடிக்க வேண்டிய பாகங்களானது அனாதி காலம் தொட்டே அவ்யக்த வடிவத்தில் நிரப்பப்பட்டிருக்கின்றன. ஆகவே ஜீவாத்மாக்கள் அனாதி காலமாகவே விதவிதமான குணங்களையும் கர்மங்களையும் சுபாவம், சம்ஸ்காரங்களையும் கொண்டவைகள், ஆத்மாவின் குணங்களும், சுபாவங்களும் சம்ஸ்காரங்களும் மற்ற ஆத்மாக்களோடு சேரவே சேராது. மாங்கொட்டையிலிருந்து மிளகாய் முளைக்காது. விதையைப் போலத்தான் மரம் வளரும். இவ்வாறே ஜீவாத்மாவானது பசு பட்சிகளின் பிறவிகளில் பிறவாது. ஆனால் அதிகபட்சமான 84 ஜன்மங்கள் எடுத்து செய்த கர்மங்களைப் பொறுத்து இன்ப-துன்பங்களை ஆத்மாக்கள் அனுபவிக்கின்றன.

## மனித ஆத்மா மிருகம் பட்சிகளாகப் பிறவி எடுக்குமேயானால் ஜனத்தொகை அதிகரிக்காதே!

எல்லோருமே தீய கர்மங்களைச் செய்யும் காரணத்தினால் மனிதாத்மாக்கள் மிருகம் - பட்சிகளாகப் பிறக்கின்றன என்று நினைத்தோமானால், ஜனத்தொகை குறைந்து கொண்டே வர வேண்டும். ஆனால் இன்று மக்கள் ஜனத் தொகை அதிகரிப்பதைத்தான் பார்க்கிறோம். ஏனெனில் செய்யும் தீவினைகளையொத்து மறுபிறவியை மனிதர்களாகப் பிறந்தே அனுபவிக்க வேண்டியதாக இருக்கிறது.



**பிதா ஸ்ரீ பிரம்மா**

(இவர் மூலமாக பரமாத்மா சிவபெருமான் ஞானத்தைக் கொடுத்தார்)



**ஜகதம்பா சரஸ்வதி**


(ஞான வீணையின் மூலமாக ஆத்மஜோதி எழுப்பியவர்)

பரமாத்மா பரகாயப் பிரவேசம் செய்யும் பாக்கியம் பெற்ற மனிதர் கல்கத்தாவில் புகழ் வாய்ந்த ஒரு வைர வியாபாரியாக இருந்தார். ஸ்ரீ நாராயணனின் சிறந்த பக்தராக விளங்கினார். அவரிடம் இரக்க சிந்தனை, எல்லோரிடத்தும் நல்லெண்ணம், சீரான உறவுமுறை, எளிதாகப் பழகும் தன்மை, இராஜ கம்பீரம், இறைவனை அடைய வேண்டும் எனும் பேராவல் போன்ற பண்புகள் இயற்கையாகவே இருந்தன. அவர் பல சமஸ்தான ராஜகுடும்பத்தினருடனும், பெரிய மனிதர்களிடமும் நன்கு அறிமுகமாயிருந்தார். சாதாரண மக்களிடமும் கூட அவர் புகழ் பெற்றிருந்தார். அவர் அனுபவஸ்தராகவும், பக்தி நெறி வாய்ந்தவராகவும் வைராக்கிய சிந்தனை உடையவராகவும் இருந்தார். உண்மையான இல்லற தர்மத்தை நிலைநாட்டுவதற்காக, இல்லறத்திலிருந்த ஒருவர் தான் தேவைபட்டது. இதற்காகவும் இன்னும் பல காரணங்களுக்காகவும் திரிகால தரிசி பரமபிதா சிவபெருமான் இவருடைய சரீரத்தில் பிரவேசம் செய்தார்.

அவருடைய கமலத்திருவாய் மூலமாக ஞானத்தையும், யோகத்தையும் கேட்ட அத்தனை பிரம்மா குமார் குமாரிகளிலும் மேன்மையானவராகத் திகழ்ந்தவர் தான் **ஜகதம்பா சரஸ்வதி**யாவார். அவர்தான் பிரம்மாகுமாரிகள் எனும் இந்த ஞான வேள்வியின் தாய். ஞான வீணையை மீட்டி இறைவனின் அறிமுகத்தைக் கொடுத்து ஆத்மாக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார். பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்து, சகஜ இராஜயோகத்தின் மூலமாக பல்லாயிரக்கணக்கான ஆத்மாக்களுக்கு ஞான ஒளியைக் கொடுத்தார். பிரஜாபிதா பிரம்மாவும் ஜகதம்பா சரஸ்வதியும் தூய்மையும், தெய்வீக வாழ்க்கையுமே தங்களின் இலட்சியமென வாழ்ந்தனர்.



**பிரம்மாகுமாரி**
**தாதி பிரகாஷ்மணிஜி**
(முன்னாள் தலைமை நிர்வாகி 1969-2007)



**பிரம்மாகுமாரி**
**தாதி ஜானகிஜி**
(தற்போதைய தலைமை நிர்வாகி)



**பிரம்மாகுமாரி**
**தாதி இருதய மோகினிஜி**
(கூடுதல் தலைமை நிர்வாகி)



**பிரம்மாகுமாரி**
**தாதி இரத்தன் மோகினிஜி**
(துணை தலைமை நிர்வாகி)

இப்புத்தகத்தில் நீங்கள் படிக்கும் ஈஸ்வரிய ஞானமும், ஞானத்தைப் பற்றிய விளக்கங்களும், சகஜ இராஜயோக தியானப் பயிற்சியும் மவுண்ட் அபுவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பிரஜாபிதா பிரம்மா குமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயத்தில் கொடுக்கப்பட்டு வருகின்றன. இவ்விடமே முக்கிய வித்யாலயமாகவும், தலைமைக் காரியாலயமாகவும் செயல்பட்டு வருகிறது. இவ்வித்தியாலயத்தின் தலைமை நிர்வாகிகளே மேலே உள்ள படங்களை அலங்கரிப்பவர்கள்.

1937-ம் ஆண்டு பரமபிதா பரமாத்மா ஜோதிமய பிந்து ரூப சிவபெருமான் ஈஸ்வரிய வித்யாலயத்தை சிந்து நாட்டில் ஆரம்பித்து வைத்தார். பரமாத்மா பரந்தாமத்திலிருந்து இறங்கி வந்து சாதாரணமான ஒரு வயோதிக மனிதருடைய சரீரத்தை ஆதாரமாகக் கொண்டு ஞானத்தைக் கொடுக்கத் தொடங்கினார். ஏனெனில் சரீர ஆதாரமின்றி நிராகார பரமாத்மாவால் நமக்கு ஞானம் கொடுக்க முடியாதல்லவா?

சத்திய லோகத்தை ஸ்தாபனை செய்வதற்குத் தேவையான ஞானத்தையும், யோகத்தையும் கற்பிக்கவே பரமாத்மா வயோதிக சரீரம் ஒன்றில் திவ்ய பிரவேசம், அவதாரம், திவ்ய ஜன்மம் அல்லது பரகாய பிரவேசம் செய்தார். அந்த சரீரத்திற்கு பிரஜாபிதா பிரம்மா என்ற அலௌகீக பெயரை வைத்தார். அவருடைய கமலத் திருவாய் மூலமாக ஞானத்தைப் பெற்று பிரம்மச்சரிய விரதத்தைப் பின்பற்றுபவர்களும் தூய வாழ்க்கை விரதத்தை மேற்கொள்பவர்களுமான ஆண் பெண்களே முகவம்சாவளி பிராமணர்கள் என்று அழைக்கப்படுபவர்கள். ஏனெனில் அவர்களுடைய ஆத்மீகப் புது வாழ்வானது பிரம்மாவின் கமலத் திருவாய் மூலம் கேட்டருளிய ஞானத்தின் ஆதாரத்தில் மலர்ந்த ஒன்றாகும்.

பரமபிதா பரமாத்மா திரிகாலதரிசி, சத்திய ஸ்ரீ நாராயணனாக இருந்தவர்தான் ஜனன மரணமென்னும் சக்கரத்தில் வந்து தமது தூய்மையை இழந்த காரணத்தால் பிரம்மாவாக ஆனார் என்ற விஷயத்தை பரமாத்மா நன்றாக அறிந்திருந்தார். 5000 வருடங்களுக்கு முன்னர் அழியாத ஞான யக்ஞத்தை அதாவது பிரம்மா குமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்தியாலயத்தை ஆரம்பித்தது போலவே தற்போது மீண்டும் ஸ்தாபித்துள்ளார்.

# சிருஷ்டி-நாடகத்தை ஏற்படுத்தியவர் யார்?

இயற்கையும் ஆத்மாவும் இணைந்து நடிக்கும் அனாதியான மனித சிருஷ்டியே ஒரு நாடகம் இதைத் தெரிந்து கொள்வதால் ஒரு ஜீவாத்மா வானது அளவுக்கப்பாற்பட்ட ஆனந்தமடையும்.

## சிருஷ்டி என்னும் நாடகத்தில் 4 காட்சிகள்

சுவஸ்திக் சின்னமானது சிருஷ்டி சக்கரத்தைச் சரியாக 4 சம பாகங்களாகப் பிரிக்கிறது. அவைகள் சத்தியயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலி யுகமாகும்.

சிருஷ்டி நாடகத்தில் நடிப்பதற்காக ஒவ்வொரு ஆத்மாவும் அது வரவேண்டிய சமயத்தில் பரந்தாமத்திலிருந்து இவ்வுலக நாடக மேடைக்கு வருகிறது. முதன் முதலில் சத்யுகம் திரேதாயுகத் தின் அழகான காட்சி வருகிறது. இவ்விருயுகங் களிலும் ஆதிசனாதன தேவி தேவதா தர்மத்தின் வம்சத்தைச் சேர்ந்த ஜீவாத்மாக்கள் நடிக்கும். மற்றதர்மங்களைச் சேர்ந்த ஆத்மாக்கள் பரந்தாமத் திலேயே இருந்துவிடும். தங்கள் தூய்மைக்குத் தகுந்தாற்போல இவ்விருவம்சத்தைச் சேர்ந்த வர்கள் வரிசைக்கிரமமாக வருவார்கள். ஆகவே இவர்கள் கருத்து வேறுபாடின்றி ஒற்றுமையுடனும், நட்பு நிறைந்த சுபாவ முள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

துவாபரயுகத்தில் இதே தர்மமானது ரஜோ குணமுள்ளதாகிவிடுவதால் இப்ராஹிம் மூலமாக இஸ்லாமிய தர்மமும், புத்தரின் மூலமாக பௌத்த தர்மமும், இயேசு மூலமாக கிறிஸ்தவ தர்மமும் ஸ்தாபனை ஆகிறது. இந்த நான்கு தர்மங்களைச் சேர்ந்தவர்களே முக்கியமான நாடகப் பாத்திரம் வகிப்பவர்கள். இவர்களைத் தவிர சந்நியாச தர்மத்தை ஏற்படுத்திய சங்கராச்சாரியார், முகம்மதிய தர்மத்தைச் சேர்ந்த முகம்மது, மேலும் சீக்கிய தர்மத்தைச் சேர்ந்த குருநானக் போன்றவர் கள் இவ்வுலக நாடக நடிகர்களில் முக்கியமான நாடக பாத்திரங்களாவர். ஆனாலும் முதலில் கூறிய நான்கு பேர்கள் நடத்தும் நாடகப் பாத்திரமே உலக நாடகத்திற்கு ஆதாரமாகும். பல மதங்களின் காரணமாகவே துவாபர யுகத்திலும் கலியுகத்திலும் இச்சிருஷ்டியில் ஒற்றுமையின் மையும், சண்டை சச்சரவுகளும் ஏற்பட்டு அதனால் துன்பம் அதிகமாகிறது.

கலியுகக் கடைசியில், தர்மம் அழிந்து போன நிலையில் அதாவது மிகப்பழைய தர்மமான ஆதிசனாதன தேவி தேவதா தர்மம் அழிந்துவிட்ட நிலையிலும் ஜீவாத்மாக்கள் பதீதமாகிவிட்ட காலத்திலும் இச்சிருஷ்டியைப் படைத்தவரும், இயக்குநருமான பரமபிதா பரமாத்மா சிவபெருமான் பிரஜாபிதா பிரம்மாவின் சரீரத்தில் அவதாரம் செய்கிறார். பிரஜாபிதா பிரம்மாவின் கமலத்திரு வாய் மூலமாகப் பிறந்த கன்னிப் பெண் பிரம்மா குமாரி சரஸ்வதியையும், மற்ற பிராமணர்களையும் படைக்கிறார். பிரஜாபிதா பிரம்மாவையும் சரஸ்வதி யையும் அலௌகீக தாய் தந்தையின் ரூபத்தில் சந்திக்கின்றோம். அவர்களின் மூலமாக ஞானத் தைக் கொடுத்து வழிகாட்டி முக்தி ஜீவன் முக்தி என்பது நமது பிறப்புரிமை என்பதையும் தெளிவு படுத்திக் காட்டுகிறார். ஆதாம்-ஏவாள் என்பவர் களும் அதம்-அவ்வா என்பவர்களும் பிரம்மா சரஸ்வதியே ஆவார்கள். அவர்கள் மூலமாகத் தான் பரமபிதா பரமாத்மா தாமாகவே இப்பூலோகத்தில் சொர்க்கத்தை ஸ்தாபிக்கிறார். கலியுகக் கடைசிக்கும் சத்யுக ஆரம்பத்திற்கும் இடைப்பட்ட இக்குறுகிய சங்கமயுகம் பரமாத்மா அவதாரம் செய்யும் காரணத்தால் மிகவும் மகத்துவம் வாய்ந்ததாகும்.

உலகச் சரித்திரமும் பூகோளமும் மறுபடியும் தொடங்குகிறது. கலியுகக் கடைசியில் பரமாத்மா சங்கரர் மூலமாக இப்பழைய உலகத்தை அழித்து விடுகிறார். அப்போது எல்லா ஆத்மாக்களும் தமக்குப் பிரியமான பிரம்மலோகத்திற்குச் செல் கின்றன. அதன் பிறகு ஆத்மாக்கள் தமது தூய்மைக்கு ஏற்றபடி சத்திய லோகத்தில் பிறந்து ஆதிசனாதன தேவி-தேவதா தர்மத்தைப் பின்பற்றி வாழ்கின்றன. 2500 ஆண்டுகளுக்குப் பிறகு துவாபரயுக ஆரம்பத்தில் இப்ராஹிம் ஸ்தாபிக்கும் இஸ்லாமிய தர்மத்தைச் சேர்ந்தவர்களும், புத்த தர்மத்தைச் சேர்ந்தவர்களும், கிறிஸ்தவ தர்மத்தைச் சேர்ந்தவர்களும் தத்தமது சமயத்தில் சிருஷ்டி என்னும் நாடகமேடையில் வந்து ஏற்கனவே நிச்ச யிக்கப்பட்ட தங்கள் நாடகப் பாத்திரத்தை வகிப்பார்கள். தங்கம், வெள்ளி, தாமிரம், இரும்பு, போன்ற உலோகங்களை ஒத்த நான்கு கட்டங்களை யும் கடப்பார்கள். அனாதியாக நிச்சயிக்கப்பட்டு விட்ட இந்த சிருஷ்டி நாடகமானது அனாதி காலம் தொட்டு ஒவ்வொரு 5000 வருடங்களுக்கும் ஒரு முறை இதே போலவே திரும்பத் திரும்ப நடைபெறுகிறது.

# சிருஷ்டிச் சக்கரம்
# WORLD DRAMA WHEEL



# கலியுகத்தின் மாற்றம் DESTRUCTION OF KALIYUGA






## கலியுகம் இன்னும் குழந்தையல்ல; முதிர்ந்தநிலை; இதன் அழிவு நெருங்கிக் கொண்டிருக்கிறது; சீக்கிரமே சத்திய லோகம் வரப்போகிறது

கலியுகம் இன்னும் சிறு குழந்தை என்று பலரும் சொல்லுகிறார்கள். கலியுகத்திற்கு இன்னும் பல லட்சக்கணக்கான வருட ஆயுள் உள்ளதாக வும், சாஸ்திரங்களின்படி சிருஷ்டியின் அழிவிற்குப் பலகாலம் இருப்பதாகவும் பலவிதமாகக் கூறுகிறார்கள்.

ஆனால் பரமபிதா பரமாத்மாவோ கலியுகம் முடியும் தறுவாயிலிருக்கிறது; முதுமைநிலை அடைந்துவிட்டது என்று சொல்கிறார்; சிருஷ்டி யானது தன்னுடைய பேரழிவினை நெருங்கிக் கொண்டிருக்கிறது. காம, குரோத, மோக, லோப அகங்காரம் என்னும் தீயில் இவ்வுலக மக்கள் வெந்து கொண்டிருப்பதை நீங்கள் பார்த்துக் கொண்டுதானிருக்கிறீர்கள். அழிவிற்காகவே அணுகுண்டுகளும், ஹைடிரஜன் குண்டுகளும் தயாராகிக் கொண்டிருக்கின்றன. கலியுகத்தின் முடிவுக்குப் பலகாலம் இருப்பதாகச் சொல்பவர்கள் கும்பகர்ண நித்திரையில் இருப்பவர்கள்; அஞ்ஞானத்தில் இருப்பவர்கள். அவர்கள் பரமாத்மாவிடமிருந்து ஞான அமிர்தத்தை அருந்தும் பேறு பெறாதவர்கள்.

ஜனப் பெருக்கத்திற்கு ஏற்ப விளைச்சல் இல்லாத காரணத்தினால் பஞ்சம் என்று சொல்லி வருகிறார்கள். இதனால் இவ்வுலகம் அழியப்போவதாகவும் சொல்கிறார்கள். பெட்ரோல் கிடைக்காமற்போவது, காற்றில் அசுத்தம் அதிகரிப்பது ஆகியவற்றால் தொல்லைகள் பல வரும். இவ்வுலகம் குளிர்ந்து கொண்டே வருவதும் கூட நல்லது அல்ல. அமெரிக்காவிடமும் ரஷியாவிடமும் மிக அதிகமான அளவில் அணுகுண்டுகள் தயாராக இருக்கின்றன. இதே ரீதியில் கலியுகம் வளர்ந்து கொண்டிருந்தால் மக்களின் நிலைமை என்னவாகும் தெய்வீக தர்மத்தை பரமாத்மா வந்து ஸ்தாபிக்கிறார் என்பதையும் எல்லோரும் ஞாபகம் கொள்ள வேண்டும். பரிசுத்தமான தெய்வீக சிருஷ்டியை பரமாத்மா வந்து மறுபடியும் ஸ்தாபித்துக் கொண்டிருப்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரிய வேண்டும். அவர் மனிதர்களை தேவர்களாகவும் தூய்மையற்றவர்களை தூய்மையானவர்களாகவும் மாற்றிக் கொண்டிருக்கிறார். அவரிடமிருந்து விலைமதிப்பற்ற சகஜ ராஜயோகத்தையும் ஞானத்தையும் கேட்டு வாழ்க்கையைப் பரிசுத்த மாகவும், சாத்வீக மானதாகவும், தெய்வீகமாகவும், ஆனந்தமான தாகவும் மாற்றிக் கொள்ள சர்வோத்தம முயற்சி செய்ய வேண்டும். கலியுகம் முடிவதற்கு இன்னும் பல லட்சக்கணக்கான வருடங்கள் மீதமிருக்கின்றது என்று நினைப்பவர் கள் தங்களுடைய சௌபாக்கியத்தை தாமே இழப்பவர்கள் ஆவார்கள். இக்கலியுக சிருஷ்டி தன்னுடைய கடைசி மூச்சை சுவாசித்துக் கொண்டிருக்கிறது. காமம், குரோதம், பேராசை, மோகம், அகங்காரம் என்னும் நோய்களால் வாடிக் கொண்டிருக்கிறது. கலியுகத்தைக் குழந்தை என எண்ணிக் கொண்டு தூங்குபவர்கள் கும்பகர்ணர் கள்: ஈஸ்வரனால் சொல்லப்படும் இந்த ஞானத்தைக் காது கொடுத்து கேட்காதவர்கள் பின்னால் மிகவும் வருத்தப்பட நேரிடும்.

# இராவணன் என்பது யார்? அவனுக்குப் பத்துத்தலைகள் இருந்தனவா?

பாரத மக்கள் ஒவ்வொரு வருடமும் குறிப்பாக டில்லியில் இராவணன் உருவம் செய்து எரிக்கிறார்கள். பத்துத்தலை இராவணன் ஒருவன் இலங்கையின் ராஜாவாக இருந்ததாகக் கூறுகிறார்கள். அவன் ஒரு ராட்சசன் என்றும், ஸ்ரீ சீதையை அபகரித்துக் கொண்டு சென்றான் என்றும் சொல்லுகிறார்கள். இராவணன், ஒரு வித்துவான் என்றும் சொல்லி அவன் கையில் வேதம் சாஸ்திரம் முதலியவற்றையும் காட்டுகிறார்கள். அவன் தலையில் கழுதை சின்னமும் காட்டியிருக்கிறது. அவன் மதியற்றவன் என்றும் பிடிவாதமுள்ளவன் என்றும் காட்டுவதற்குத்தான் அச்சின்னம் என்கிறார்கள். ஆனால் பரமபிதா பரமாத்மா சிவபெருமான், இராவணன் பத்துதலை கொண்ட ராட்சசன் அல்ல; இராவணன் என்பது கெட்டதே உருக்கொண்டதன் தோற்றமாகும் என்று சொல்லுகிறார். ஆண்-பெண்களிடமுள்ள பஞ்சவிகாரங்களின் மொத்த உருவமே இராவணனின் பத்துத் தலையாகும். வேத சாஸ்திரங்களைப் படித்திருந்தபோதிலும் விஞ்ஞானத்திலும் படிப்பிலும் தேர்ந்திருந்தபோதிலும், பலர் இம்சை செய்வதிலும் விகாரத்தில் ஈடுபடுவதிலும் நிபுணர்களாக இருக்கிறார்கள். நல்ல விஷயங்களைக் கேட்க அவர்களுடைய காதுகள் விரும்புவதில்லை. மற்றவர்களை அழவைப்பவனை இராவணன் என்பர், தீய கர்மங்கள் தான் மனிதனை அழவைக்கின்றன. ஆத்மாவின் நல்ல எண்ணங்களை அபகரித்துச் செல்வதுதான் சீதையை இராவணன் அபகரித்தான் என்பதற்கு அர்த்தம். சோம்பேறித்தனத்தை உருவகிப்பதற்காக கும்பகர்ணனையும், கடுஞ்சொற்கள் சொல்வதற்கு மேகநாதனையும் உருவகிப்பதுண்டு. இவ்வுலகமே ஒரு தீபகற்பம்; அதாவது மனிதனின் மனமே இலங்கை என்ற தீபகற்பமாகும்.

துவாபர, கலியுகங்களில் (2500 வருடங்கள்) இராவண ராஜ்யமே இருந்தது என்று இதனால் சொல்ல முடிகிறது. ஏனெனில் இவ்விருயுகங்களிலும் மக்கள் மாயை அல்லது இராவணனின் வசமாகி விடுகிறார்கள். அச்சமயத்தில் பல பூஜைகளைச் செய்தாலும், சாஸ்திரங்களைப் படித்தாலும், மனிதர்கள் விகாரிகளாகவும் அதர்மம் நிறைந்தவர்களாகவும் ஆகிவிடுகிறார்கள். நோயும், சோகமும், துன்பமும் நிம்மதியற்ற நிலையும் எங்கும் நிறைந்திருக்கிறது. மக்களின் உணவுப் பழக்கங்களும் கூட (மதுபானம், மாமிசம் போன்ற தாமசிக உணவுகள்) அசுரத்தன்மை வாய்ந்ததாகி விடுகிறது. அவர்கள் காமம், குரோதம், லோபம், மோகம், அகங்காரம், பொறாமை போன்றவற்றின் வசப்பட்டு ஒருவருக்கொருவர் துன்பத்தைக் கொடுத்து அழவைக்கிறார்கள். ஆகவே இராமர் என்ற ரமணீகரமான பரமாத்மா ஸ்வர்ண யுகமான சொர்க்கத்தை ஸ்தாபனை செய்தார்.

நிகழ்காலத்தில் மறுபடியும் மக்கள் இராவணனின் வசத்தில் இருக்கிறார்கள். உத்தியோக முன்னேற்றமும், தனதான்யங்களும், சம்சார சுகமும் சாதனங்களும் இருந்தபோதிலும் மக்களுக்கு உண்மையான சுகமும் சாந்தியும் கிடையாது. வீட்டுக்கு வீடு கலகமும், கிலேசமும், சண்டை சச்சரவுகளும் துன்பமும், தொல்லைகளும், அட்டூழியங்களும் கலப்படமும், பொய்யும் பித்தலாட்டமும் நிறைந்த ஆட்சிதான் இருக்கிறது. அதனால் இதை இராவண ராஜ்யம் என்கிறோம்.

பரமாத்மா சிவபெருமான் கீதையில் சொன்ன தமது மகாவாக்கின்படி சகஜ ஞானத்தையும், இராஜயோகத்தையும், ஜீவாத்மாக்களின் மனோ விகாரங்களைத் தொலைத்துவிட்டு, தெய்வீக குணங்களை மேற்கொள்ளச் சொல்லிக் கொடுத்து, பாபு காந்திஜி கனவு கண்ட அந்த ராம ராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறார். சத்ய தர்மத்தினைக் கடைப்பிடித்தும், நிர்விகாரி மார்க்கத்தைப் பின்பற்றியும் பரமாத்மாவின் இம்மாபெரும் காரியத்தில் சகயோகிகளாக இருந்து நாம் ஒத்துழைத்தல் மிகவும் அவசியமாகும்.

# இன்றைய உலகம்




# WORLD OF TODAY


சத்யுகம் – மானிட வாழ்க்கையின் பொற்காலம் – நாளைய உலகம்
Satyug - Golden Age - World Of Tomorrow
ஒரு உலக அரசாங்கம்
ஒரு உலக தர்மம்
ஒரு உலக மொழி
ஒரு உலக வம்சம்
ONE WORLD GOVT.
ONE WORLD RELIGION
ONE WORLD LANGUAGE
ONE WORLD DYNASTY
ஆன்மீகம் மற்றும்
அரசியல் சக்திகள்
ஒருவரிடமே இணைந்திருக்கும்
RELIGIOUS AND
POLITICAL POWER
IN ONE HAND
விஷ்வ மகாராஜன் ஸ்ரீ நாராயணன் & விஷ்வ மகாராணி ஸ்ரீ லட்சுமி
World Emperor Sri Narayan & World Empress Sri Lakshmi

# மனித வாழ்க்கையின் லட்சியம் என்ன?

நடந்து கொண்டிருக்கும் இக்காலம் மிகவும் மதிப்பு வாய்ந்தது. விலை மதிக்க முடியாதது. ஏனெனில், இச்சங்கமயுகத்தில்தான் உத்தமமான முயற்சி செய்து ஜன்ம ஜன்மத்திற்கான உத்தமமான பலாபலன்களை அடைய முடியும் வைரத்தை ஒத்த செல்வங்களைச் சம்பாதித்துக்கொள்ள முடியும். இதே ஜன்மத்தில் இச்சிருஷ்டிக்கே தலைவர்களாகி உலகை வெற்றி கொண்டவர்களாக வாழ முடியும். வாழ்வின் உன்னதமான இந்த லட்சியத்தை அறியாத காரணத்தால் இன்றைய உலகின் மக்கள் உத்தமமான முயற்சி செய்வதற்குப் பதிலாக விஷ விகாரங்களில் ஈடுபட்டு அற்பகாலத்திற்கான பிராப்தியை அடைவதிலேயே நேரத்தைக் கழித்துக் கொண்டிருக் கிறார்கள். உலகீயக் கல்வியின் மூலம் வக்கீலாகவும், மருத்துவர், பொறியியல் வல்லுநராகவும் ஆவதற்கான முயற்சி செய்கிறார்கள். அரசியலில் நாட்டம் கொண்டு நாட்டுத் தலைவர்களாகிறார்கள். மந்திரிகளாக ஆவதற்கும் விருப்பம் கொண்டு முயற்சி செய்கின்றனர். மற்ற சிலரோ இவற்றை எல்லாம் துறந்து சந்நியாசிகளாக வாழ விரும்புகிறார்கள். ஆனால் இந்த மரணலோகத்தில் ராஜா-ராணி தலைவர்கள், வக்கீல், மருத்துவர், பொறியியலா், சந்நியாசி யாருமே பரிபூரண சுகத்தில் இல்லை. எல்லாருக்குமே உடல் நோய், மனநோய், நிம்மதியற்றதன்மை, செல்வத்தின் குறைவு, இயற்கை மூலமாக ஏதாவது தொல்லைகள் போன்ற ஏதோ ஒன்று இருக்கத்தான் செய்கிறது. இக் கல்வியால் மனித வாழ்வின் லட்சியத்தை அவர்கள் அடைவதில்லை. ஏனெனில் மக்களுக்கு சம்பூர்ண மானதும், நிரந்தரமானதுமான தூய்மையும், சுகமும் தேவையாக இருக்கிறது.

படத்தில் மனித வாழ்க்கையில் முக்கியமாக அடைய வேண்டிய நிலையாகிய முக்தி அல்லது வைகுண்டத்தில் சம்பூர்ண சுகமும் சாந்தியும் நிறைந்த ஸ்ரீ நாராயணர் அல்லது ஸ்ரீ லட்சுமி ஆகியோரின் உருவம் காண்பிக்கப்பட்டுள்ளது. வைகுண்டத்து தேவதைகள் அமரர்கள், அவர் களுக்கு அகால மரணம் ஏற்படாது. அவர்கள் சரீரமோ நோயற்றது. அவர்களிடத்தில் அனைத்து செல்வமும் நிறைந்திருக்கும். இதனால் தான் மக்கள் சொர்க்கம் அல்லது வைகுண்டத்தை எப்போதும் நினைக்கிறார்கள். தமது உறவினர்கள் யாராவது உடலை நீத்தால் உடனே அவர் சொர்க்கத்திற்குச் சென்றதாகவும் கூறுகிறார்கள்.

## ஈஸ்வரீய ஞானத்தினால், ஈஸ்வரனால் மட்டுமே இப்பதவியைக் கொடுக்க முடியும்

இந்த லட்சியத்தை அடைய மனிதனாலோ, சாது சந்நியாசியாலோ, குருவாலோ, ஜகத் குருவாலோ வழிகாட்ட முடியாது. இரண்டு கிரீடம் அணியும் தேவ பதவி அல்லது ராஜா ராணி பதவியானது ஞானக் கடலான பரமபிதா பரமாத்மா சிவபெருமானால் மட்டுமே, பிரஜாபிதா பிரம்மா மூலமாக கொடுக்கப் படும் ஈஸ்வரிய ஞானத்தினாலும் சகஜ இராஜயோகப் பயிற்சியினால் மட்டுமே அடைய முடியும்.

பரமபிதா பரமாத்மா சிவபெருமான் சர்வோத்தம ஈஸ்வரிய ஞானத்தைக் கற்பிப்பதற்காக பிரஜாபிதா பிரம்மா குமாரிகள் ஈஸ்வரீய விஷ்வ வித்தியாலத்தை ஸ்தாபனம் செய்திருக்கிறார். ஆகவே, ஆண்-பெண் அனைவரும் இல்லத்தில் இருந்து கொண்டே தத் தம் காரியங்களைச் செய்து கொண்டே தினமும் ஒன்றல்லது 2 மணி நேரத்தை செலவு செய்து தங்கள் எதிர்காலத்திற்காக, ஜன்ம ஜன்மாந்திர நன்மைக்காக, உயர்ந்த இந்த எளிய கல்வியை வந்து கற்க வேண்டியது அவசியமாகிறது. இக்கல்விக் காக செலவு செய்ய வேண்டியது ஏதுமில்லை. ஏழைகளும் கூட இதைக் கற்றுப் பயன் பெற முடியும்; தங்கள் சௌபாக்கியத்தை அடைய முடியும். கன்னிப் பெண்கள், தாய்மார்கள், வயோதி கர்கள், சிறுகுழந்தை கள், போன்ற அனைவருக்குமே இதைக் கற்க அனுமதி உண்டு. ஏனெனில் ஆத்ம திருஷ்டியில் எல்லோருமே பரமாத்மாவின் குழந்தைகள் ஆவார்கள்.

## இன்றில்லையேல் என்றுமேயில்லை

எல்லோருக்கும் இது கடைசிப் பிறவியாகும். இப்பிறவியில் முயற்சி செய்யாவிட்டால் எப் பொழுதுமே செய்ய முடியாது. ஏனெனில் ஞானக் கடலான பரமபிதா பரமாத்மா சுயம் தானாகவே வந்து இந்த கீதா ஞானத்தைக் கல்பத்தில் ஓரே ஒரு முறை மட்டுமே பிரம்மாவின் உடலை ஆதார மாகக் கொண்டு பிரம்மா குமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்தியாலயத்தின் மூலம் கற்றுத் தருகிறார். அந்த குறுகிய காலம், கலியுகத்தின் இறுதியாகிய தற்காலமே.

# வெகு சீக்கிரத்தில் ஸ்ரீகிருஷ்ணர் வருகிறார்

தினந்தோறும், செய்திப் பத்திரிகைகளில் பஞ்சம், பட்டினி, கொள்ளையடித்தல், சண்டை சச்சரவு, பூசல் போன்ற விஷயங்களே அதிகமாகத் தெரிய வருகின்றன. இயற்கையின் பஞ்ச தத்துவங்களும் கூட மனிதனுக்கு துன்பம் கொடுக்கின்றன. சூழ்நிலையும் கெட்டுப்போயிருக்கிறது. குற்றங்களும், கொலைகளும், விஷமென்னும் விகாரங்களும் அதர்மமும் நிறைந்து விட்டிருக்கிறது. ஆகவே இவ்வுலகை முட்கள் நிறைந்தகாடு என்று சொல்வது தவறாகாது. சுகமும் சாந்தியும் சம்பூர்ண மாக நிறைந்த பூஞ்சோலையாக இருந்தது. இயற்கையும் கூட சாத்வீகமாக இருந்தது. இயற்கை ஆபத்துக்களும் விபத்துக்களும் இல்லாமல் இருந்தது. மனிதர்கள் சதோபிரதானமானவர்களாக வும் தெய்வீக குணமிக்கவர்களாகவும் ஆனந்தமாக வும் வாழ்க்கை நடத்தினர். அப்போது இவ்வுலகம் சொர்க்கமாக இருந்தது; அதையே சத்யயுகம் என்று சொல்கிறோம். ராஜாக்களும் பிரஜைகளும் சுகமாகவும் சாந்தியுடனும் வாழ்ந்து வந்ததற்கு காரணம் அவர்கள் தூய்மையானவர்களாகவும் சிரேஷ்டமானவர் களாகவும் இருந்தது தான். தங்கத்தினாலான கிரீடத்தைத் தரித்தவர்களாக அவர்களைக் காட்டு வதும் அதனால் தான். ஸ்ரீ கிருஷ்ணரும் ஸ்ரீ ராதையும் சத்தியலோகத்தின் முதல் மகாராஜ குமாரனும் மகாராஜ குமாரியும் ஆவார்கள். சுய வரத்திற்குப் பின்னர் அவர்களே ஸ்ரீ நாராயணர் ஸ்ரீ லட்சுமி என்ற பெயரால் அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் ஆட்சியில் சிங்கமும் பசுவும் ஒரே ஓடையில் நீர்குடித்தன. பறவைகளும் விலங்கினங் களும் சாத்வீகமாக இருந்தன. அப்போது வாழ்ந்தவர் கள் எல்லோருமே பரிசுத்தமானவர் களாகவும் அஹிம்சாவாதிகளாக வும் புருஷோத்தமர் களாகவும் இருந்த காரணத்தால் தேவதைகள் எனப்பட்டனர். அத்துடன் ஒப்பிடும் போது இன்றைய மக்கள் விகாரமுள்ளவர்களாக வும் துன்பமும் அசாந்தியும் நிறைந்தவர்களாகவும் ஆகிவிட்டிருக் கிறார்கள். இவ்வுலகமும் பயங்கர நரகமாகி விட்டிருக்கிறது. எல்லா ஆண்-பெண் களும் காமம், குரோதம் என்னும் விஷவிகாரங் களில் மூழ்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்போது பரமபிதா பரம ஆசிரியரும் பரம சத்குருவுமான பரமபிதா சிவபரமாத்மா சொல்கிறார் குழந்தைகளே! எல்லோரும் ஜன்ம ஜன்மமாக என்னை கூவி அழைத்திருக்கிறீர்கள். "ஹே! பிரபோ! எங்களை துக்கத்திலிருந்தும், அசாந்தியிலிருந்தும் காப்பாற்றி முக்திதாமத்திற்கு அழைத்துச் செல் என்று. ஆகவே உங்களை முக்திதாமத்திற்கு அழைத்துச் செல்லவே நான் வந்திருக்கிறேன். இதுவே உங்கள் கடைசி ஜன்மம், இப்போது பரிசுத்தமான அந்த வைகுண்டத்திற்குப் போவதற்கான ஏற்பாட்டைச் செய்து கொள்ளுங்கள். தூயவர்களாகவும் யோகிகளா கவும் ஆகிவிடுங்கள். ஏனெனில் வெகு சீக்கிரத்தில் ஸ்ரீ கிருஷ்ணரின் (ஸ்ரீ நாராயணர்) ராஜ்ஜிய ஸ்தாபனை ஆகப்போகிறது. அணு ஆயுதங்களாலும், இயற்கைச் சேதங்களாலும் உள்நாட்டுப் போரினாலும், கலகங்களினாலும் இப்பழைய சிருஷ்டியானது அழிந்து போகும். படத்தில் பூலோகத்திற்கு மேல் ஸ்ரீ கிருஷ்ணர் அமர்ந்து புல்லாங்குழல் வாசிப் பதாகக் காட்டப்பட்டிருக்கிறது. முழு உலகிலும் ஸ்ரீ கிருஷ்ணருடைய ஆட்சி இருக்கும்: ஒரே தர்மமும், ஒரே மொழியும், ஒரே மதமும், சம்பூர்ண ஆனந்த மும், சாந்தியும் நிறைந்த காலம் குழலோசைபோல் இனிக்கும் என்பதே அதன் அர்த்தம்.

துவாபரயுகத்தின் கடைசியில் ஸ்ரீ கிருஷ்ணர் வருகிறார் என்று பலர் நினைத்துக் கொண்டிருக் கின்றனர். ஸ்ரீ கிருஷ்ணர் சர்வ குணம் நிறைந்தவர்; பதினாறு கலைகளும் பெற்ற சம்பூர்ண நிர்விகாரி: பூர்ணமாக விகாரம் நிறைந்த துவாபர யுகத்தில் அவருடைய ஜென்மம் எப்படி இருந்திருக்க முடியும்? ஸ்ரீ கிருஷ்ணரின தரிசனம் வேண்டி சூர்தாஸ் அபவித்திரமான தன்னுடைய பார்வை யையும் இழப்பதற்குத் தயாராக இருந்தார். மீராவும் கூட தன் தூய்மையைக்காக்க வேண்டி விஷம் அருந்தவும் தயாராக இருந்தார். அப்படியிருக்க அபவித்திரமான திருஷ்டியும், சிருஷ்டியும் நிறைந்த அக்காலத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் எப்படி பிறக்க முடியும்? ஸ்ரீ கிருஷ்ணரே சுயம்வரத் திற்குப் பின்னர் ஸ்ரீ நாராயணர் ஆன காரணத்தால் ஸ்ரீ நாராயணரின் இளமைப் பிராயத்தின் சின்னம் ஏதும் கிடையாது. ஆகவே ஸ்ரீ கிருஷ்ணர் எனப் படும் ஸ்ரீ நாராயணர் சத்தியலோக சிருஷ்டியின் ஆரம்பத்தில் பிறந்திருந்தார். அதேபோல் மறுபடியும் வந்து பிறக்கப்போகிறார்.


ஸ்ரீ கிருஷ்ணர் விரைவில் வருகிறார்
16 கலைகள் நிறைந்தவர்
சம்பூர்ண நிர்விகாரி
சத்யுகத்தின் முதல் இளவரசர்
மரியாதை புருஷோத்தமர்
சத்யுக பாரதம்
(வைகுண்டம்)
SRI KRISHNA IS COMING SOON

# ஸ்ரீ கிருஷ்ணர் தேவதை – சிவபரமாத்மாவே கடவுள்




## SHRI KRISHNA IS A DEITY & SHIVA IS GOD

# சர்வ சாஸ்திரங்களின் சிரோன்மணியான ஸ்ரீமத் பகவத் கீதை உபதேசம் செய்தது யார்?

ஞானக்கடல் என்று துதிக்கப்படும் பரம பிதா பரமாத்மா மக்களின் நன்மைக்காக ஞானத்தை கொடுத்தருளியதன் தொகுப்பு நிறைந்த சாஸ்திரம் எதுவென்று மக்களுக்கு இன்றும் கூடத் தெரியாது. கீதா ஞானத்தை பகவான் கொடுத்தார் என்பது பாரத மக்களுக்குத் தெரியும். ஆனால் துவாபர யுகத்தின் கடைசியில் யுத்த மைதானத்தில் அர்ஜுனனின் ரதத்தில் இருந்து ஸ்ரீ கிருஷ்ணர் கீதா ஞானத்தைக் கொடுத்ததாகவே கருதுகின்றனர். இவ்வற்புதமான ரகசியமானது படத்தில விளக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் கீதா ஞானமானது நிராகார பரமபிதா பரமாத்மா சிவனே கொடுத்தருளியதாகும். கீதா ஞானத்தினால் தான் சத்யுகத்தில் ஸ்ரீ கிருஷ்ணரே பிறந்தார் கோபேஷ்வரனான பரமாத்மா சிவபெருமான் தான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு பரலோக தந்தையானவர்; கீதையே ஸ்ரீ கிருஷ்ணருக்கு தாயாகும்.

## கீதா ஞானம் துவாபரயுகத்தில் அல்ல; சங்கமயுகத்தில் தான் கூறப்பட்டது

உலகில் தர்மத்தை மறுபடியும் நிலைநாட்டு வதற்காகவே கீதா ஞானம் கொடுக்கப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும். கீதையின் நாயகன் தெளிவு படுத்தி இருப் பதாவது அதர்மத்தை அழித்து சத்திய தர்மத்தை மறுபடியும் ஸ்தாபனை செய்வதற்காகவே நான் அவதரிக்கிறேன் அங்ஙனம் பகவான் அவதாரம் செய்த பிறகும் கீதா ஞானத்தைக் கொடுத்தபிறகும் தர்ம ஸ்தாபனையையும், தெய்வீக சுபாவம் நிறைந்த சம்பிரதாயமுமே ஓங்கியிருக்க வேண்டும். ஆனால் தெரிந்திருப்பதும். நடந்திருப் பதும் என்னவெனில், துவாபரயுகத்திற்குப் பின்னர் கலியுகம் தொடங்கிற்று. அதனால் அதர்மம் தழைத் தோங்கியுள்ளது. மனிதர்களின் சுபாவம், தமோபிர தானமாகவும், அசுரத்தன்மையுள்ளதாகவும் ஆகி யுள்ளது. துவாபரயுகத்தின் கடைசியில் தான் கீதா ஞானம் அளிக்கப்பட்டது என்று கருதுபவர்கள் கீதா ஞானத்தை கொடுத்தபிற்பாடும் பகவான் அவதாரம் செய்த பிற்பாடும் அதன் பலன் இது தானா என்று சற்று சிந்தனை செய்து பார்க்க வேண்டும். கீதா ஞானத்திற்குப் பின்னர் அதர்மம் நிறைந்த யுகம் தொடங்கிற்றா? இதற்கு அவர்கள் "இல்லை" என்ற பதிலையே தருவார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

பகவான் அவதரித்தபிறகு கலியுகம் தொடங்கிற்று என்று கருதுவது அவரது பெருமையைக் குறைப்ப தாகும். அவர் அவதரித்ததன் நோக்கம் இப்புவியில் உள்ள அசுர குணங்களை அழிப்பதேயாகும். தர்மத்தை நிலைநாட்டி மனிதர்களை ஸ்ரீ நாராயணர் களாக்குவதே அவருடைய மேலான காரியமாகும். பகவான் மனித சிருஷ்டியின் விதை வடிவம். சத்திய சொரூபமும் அவரே, இவ்வுலகிற்கு அவர் வந்த பிறகு புதிய விருட்சம், அதாவது புதிய சத்யுக சிருஷ்டி தொடங்கிற்று. துவாபரயுகத்தின் கடைசியில் கீதா ஞானம் கொடுக்கப்பட்டிருந்தால், கலியுகத்தில், தமோபிரதானமான சூழ்நிலையில் ஞானத்தை கேட்டதன் பலனை அனுபவிக்க முடியாமல் தான் போகும். தீபாவளி பண்டிகையின் போது ஸ்ரீ லட்சுமியை வரவேற்பதற்காக பாரத மக்கள் தங்கள் வீடுகளை சுத்தப்படுத்தி தீபங்களை ஏற்றி வைக்கிறார் கள். இதிலிருந்து அபவித்திரமான இருளடைந்த இடங்களில் தேவதைகள் தன் பாதங்களை வைக்க மாட்டார்கள் என்பது தெளிவாகிறது. ஸ்ரீ கிருஷ்ணர் எனப்படும் லட்சுமிபதி ஸ்ரீ நாராயணர் துவாபர யுகத்தில் பிறந்தார் என்று நினைப்பது மிகவும் தவறான தாகும். ஆனால் அவர் பிறந்தது சத்தியயுகத்தில். அப்போது மித்திரர்களும், சம்பத்துக்களும் இயற்கையும் மற்றபொருட்களும் சதோபிரதானமாக இருந்தன. ஆத்மா என்னும் தீபமானது ஒளிர்ந்து கொண்டிருந்தது. அப்போது சிருஷ்டியில் கலவரமோ மிலேச்சத்தனமோ எதுவுமோ இல்லை.

ஸ்ரீ கிருஷணர் துவாபரயுகத்தில் பிறக்கவில்லை; கீதா ஞானமும் துவாபரயுகத்தின் கடைசியில் கொடுக்கப்படவில்லை; பதீதபாவனரும் நிராகாரரு மான பரமாத்மா சிவபிரானே கலியுக கடைசியும் சத்தியலோக ஆரம்பமுமான சங்கம யுகத்தில், தர்மம் அழிந்த சமயத்தில், பிரம்மாவின் சரீரத்தில் திவ்ய ஜன்மம் எடுத்தார்; கீதா ஞானம் கொடுத்து சத்திய லோகத்தையும் ஸ்ரீ கிருஷ்ணர் அதாவது ஸ்ரீ நாராயணரின் சுயராஜ்யத்தையும் ஸ்தாபனை செய்தார். ஸ்ரீ கிருஷ்ணருக்கு தாய், தந்தை இருந்தனர். ஆசிரியரும் இருந்தார். ஆனால் கீதா ஞானத்தை சர்வ ஆத்மாக்களின் தந்தையும் தாயுமாகிய சிவபெருமானே கொடுத்தருளினார்.

# இம்சை நிறைந்த யுத்தம் புரிவதற்காக கீதா - ஞானம் அளிக்கப்படவில்லை

பரமாத்மாவின் திவ்வியமான ஜன்மத்தைப் பற்றியும் அவருடைய ரதம் அல்லது வாகனத்தைப் பற்றியும் இன்னும் மக்கள் புரிந்து கொள்ளாத காரணத்தினால் தான் ஸ்ரீ கிருஷ்ணர் அர்ஜுனனுடைய ரதத்தில் வந்து யுத்தகளத்தில் கீதா - ஞான உபதேசம் செய்தார் என்பதையே உண்மை எனக் கருதுகிறார்கள். தர்மம் ஒன்றின் முக்கியமான லட்சணமாக அஹிம்சையைக் கருதும்போதும், தர்மாத்மாக்களும் மகாத்மாக்களும் அஹிம்சையைப் பின்பற்றியும், போற்றியும், கற்பித்தும் வரும்போது பகவான் ஹிம்சை யுத்தம் செய்யுமாறு யாருக்காவது சொல்லிக்கொடுப்பாரா? பெற்ற தந்தையும் கூட தன் குழந்தைகளுக்குள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்ள வேண்டாம் என்று கற்பிக்கும் போது இச்சிருஷ்டியின் மூலமும், வித்துவும், சாந்திக் கடலுமான பரமாத்மா மனிதர்களை சண்டைபோடச் சொல்லி உபதேசம் செய்வாரா? இது ஒருக்காலும் நடக்காது. தெய்வீகம் தோய்ந்த சம்பிரதாயத்தையும் உத்தமமான தர்மத்தையும் ஸ்தாபனை செய்வதற்காகவே கீதா ஞானத்தை கொடுத்தார். இப்போதும் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அந்த ஞானத்தால் பகைமை, பாகுபாடு, இம்சை, கோபம் அத்தனையும் நீங்கும். அவற்றை நீக்கி வெற்றியடையலாம். உண்மை என்னவென்றால் நிராகாரியான பரமபிதா பரமாத்மா சிவபெருமான் கர்ம க்ஷேத்திரமும், தர்ம க்ஷேத்திரமும், குருக்ஷேத்திரமும் ஆன இவ் வுலகச் சிருஷ்டியில் பிரஜாபிதா பிரம்மாவின், அதாவது அர்ஜுனனின் சரீரம் என்னும் ரதத்தில் ஏறி (பரகாயப் பிரவேசம் செய்து) மாயை அதாவது விகாரங்களுடன் போரிடும் விதத்தைச் சொல்லிக் கொடுத்தார். ஆனால் எழுதியவர்களும், படம் வரைந்தவர்களும் அலங்காரமான மொழியில் இதை எழுதினர். வரைந்தனர். சரீரத்திற்குப் பதிலாக ரதத்தை உருவகித்தனர். பிரஜாபிதா பிரம்மாவின் ஆத்மாவுக்கு அந்த ரதத்தில் மனித உருவம் அதாவது அர்ஜுனன் என வடிவம் கொடுத்தனர். நாளடைவில் உண்மையானதும், சூட்சுமமானதுமான இந்த உண்மை மறைந்து பின்னர் ஸ்தூலமான அர்த்தம் தான் எல்லோருக்கும் ஞாபகம் இருக்கிறது.

சிவபகவான் பிரஜாபிதா பிரம்மாவின் சரீரம் எனும் ரதத்தில் அவதாரம் செய்து ஞானத்தைக் கொடுத்ததும் தர்மத்தை ஸ்தாபனை செய்ததும் சங்கமயுகத்தில்தான். அதன் பிறகு கலியுகம் அழிந்து சத்தியயுகம் ஸ்தாபனை ஆயிற்று. இப்பெரும் மாற்றத்திற்குப் பிறகு இந்த உண்மை ரகசியமானது மறைந்துபோனது. பக்தி காலமான துவாபரயுகத்தில் கீதா ஞானம் எழுதப் பட்டது. சங்கமயுகத்தில் நடந்தவற்றை எழுதும்போது வியாசர் நிகழ்காலத்தைப் பயன்படுத்தி எழுதியதால், கீதா ஞானமும் வியாசருடைய வாழ்நாட்களிலேயே நடந்ததாக அதாவது துவாபரயுகத்தில் கீதா ஞானம் சொல்லப்பட்டதாகவே எல்லோரும் நினைத்து விட்டனர். இத்தவறால் உலகில் பேரி ழப்பு ஏற்பட்டுள்ளது. கீதா ஞானத்தைப் பரமபிதா பரமாத்மா தான் உபதேசித்தார். ஸ்ரீ கிருஷ்ண ருக்கும் பரலோக தந்தை சிவபெருமானே தான். எல்லா தர்மங்களைப் பின்பற்றுபவர்களும் பூஜீப்பதும் அவரையேதான். எல்லோருக்கும் நற்கதியைக் கொடுப்பதும் அவர்தான். ராஜ்யத்தைக் கொடுப்பதும் அவரே என்ற விஷயமெல்லாம் தெரிந்திருந்தால் எல்லா தர்மத்தை சேர்ந்தவர்களும் உயர்ந்த சாஸ்திரமாக கீதையைக் கொண்டாடுவர். கீதையிலுள்ள பரம பிதாவின் மகா வாக்கியங்கள் எனக்கொண்டு சிரமேற்தாங்கி போற்றியிருப்பார்கள். பாரதத்தையே தங்களின் புண்ணிய ஸ்தலமாகக் கொண்டிருப்பார்கள். சிவஜெயந்தியையே கீதா ஜெயந்தியாகவும், கீதா ஜெயந்தியையே சிவஜெயந்தி யாகவும் கொண்டாடியிருப்பார்கள். ஜோதி சொரூபமானவரும் நிராகாரமானவரும் பரமபிதா பரமாத்மாவுமான சிவ பெருமானையே நினைத்து தூய்மையாகி சுகம், சாந்திக்கான வரங்களை அடைந்திருப்பார்கள். இதற்கு மாறாக, தேவதையான கிருஷ்ணரே கீதா ஞானத்தை உபதேசம் செய்ததாகச் சொல்லி இருப்பதால் கீதையே கண்டனத்திற்குரியதாகிறது. அதனால் உலகில் அர்த்தமற்றத் தனமும், குழப்பமும், பாவங்களும் நிறைந்து விட்டன. என்னை மட்டும் நினையுங்கள் என்று பரமாத்மா சொன்னதைக் கேட்காமல் புத்தியானது பலரையும் நினைக்கத் தொடங்கிற்று. ஆகவே உண்மையை உணர்ந்து சிவபரமாத்மா ஒருவரையே சதா நினைவில் கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகிறது.

# ஹிம்சை நிறைந்த யுத்தத்திற்காக கீதை போதிக்கப்படவில்லை







MAHABHARAT WAR DESCRIBED IN GITA


தாமரை மலர்போல்
வாழும் வழி
HOW TO LEAD
LOTUS LIKE LIFE?
அமைதியற்ற குடும்பம்
PEACELESS FAMILY
அலுவலகத்தில் கடவுள்
நினைவோடு
வேலை செய்வது
REMEMBERING GOD
WHILE AT WORK
கடவுள் ஞானத்தையும் எளிமையான
இராஜயோகத்தையும் கற்றல்.
LEARNING OF GODLY KNOWLEDGE & RAJA YOGA
சமையல் செய்யும்போதும்
சாப்பிடும் போதும்
கடவுள் நினைவு
REMEMBERING
GOD WHILE
COOKING &
EATING FOOD
எளிமையான இராஜயோகத்தை
பயிற்சி செய்தல்.
PRACTICE OF EASY RAJA YOGA
அமைதி மற்றும் மகிழ்ச்சி நிறைந்த குடும்பம்
PEACEFUL & HAPPY FAMILY

# தாமரை மலரைப்போல் வாழ்வது எப்படி?

பரஸ்பர அன்பும் நட்பும் இல்லாத காரணத்தால் இன்று வீட்டில் நிம்மதி இல்லை. ஒரு சாதாரண விஷயத்தால் சூழ்நிலையே மாறிப்போய்விடுகிறது. உண்மையுடனிருந்தாலும் நன்றியறிதலுடன் வாழ்தலை எங்குமே காணமுடிவதில்லை. காரியாலயமானாலும், வீடானாலும் பரஸ்பர அன்புடனும் நட்புடனும் நடத்தல் அவசியமாகிறது. மனநிம்மதியுடன் வாழ்வதற்கு இன்றைய மக்களுக்கு மனோ பலம் மிகவும் முக்கியமாகத் தேவைப்படுகிறது. இதற்கு யோகம் மிகவும் துணை புரியும்.

பிரம்மாகுமாரர்கள், குமாரிகள் மற்றவர்களுக்கும் சாந்தியை அடைவதற்கான வழிகாட்டுவதை தங்கள் தலையாய கடமையாகக் கருதுகிறார்கள். தூயவாழ்க்கையின் பலனாக கிடைப்பது சாந்தி என்பதையும், தூய்மைக்காகவும், சாந்திக்காகவும் பரமபிதா பரமாத்மாவின் அறிமுகமும், அவருடன் மனதை இணைப்பதுவும் அவசியமாகிறது என்ற ஞானத்தை பிரம்மா குமாரர்கள், குமாரிகள் எல்லா மக்களுக்கும் தெரிவிக்கிறார்கள். இராஜயோகப் பயிற்சி நிலையங்களுக்கோ ஈஸ்வரிய ஞானமளிக்கும் இடங்களுக்கோ வருமாறு மக்களை அழைக்கிறார்கள். அந்த நிலையங்களில் அவர்களுக்கு முக்கியமான ஈஸ்வரிய ஞானமும், இராஜயோகமும் கற்பிக்கப்படுகிறது. தாமரை யொத்த வாழ்வினைப்பற்றி விளக்கப்படுகிறது. ஞானத்தையும் யோகத்தையும் தெரிந்து கொண்ட பின்னர் காரியாலயத்தில் வேலை செய்தாலும் சரி அல்லது சமையலறையில் சமைத்தாலும் சரி சாந்திக்கடலான பரமபிதா பரமாத்மாவுடன் தொடர்பு கொண்டு காரியமாற்ற முடியும். இதனால் குடும்பத்தில் அன்பும் சாந்தியும் நிறைந்து ஆனந்தமானது எப்போதும் நிறைந்திருக்கும் குடும்பத்தில் ஒற்றுமையும் நிலைக்கும்.

திவ்வியமான ஞானத்தினால் வீண் கவலைகளை விட்டு நற்குணங்களை அடைகிறார்கள். இதற்குத் தேவையான மனோபாவமானது. யோகத்தின் மூலம் கிடைக்கிறது. இவ்வாறு தாமரை போன்ற வாழ்வு வாழத் தகுதியுள்ளவராகி விடுகிறார்கள்.

தாமரை தண்ணீரிலிருந்தாலும் அது நீரை விட்டு விலகியே இருக்கிறது. இது அதன் விசேஷ தன்மையாகும். தாமரை மலர் அதனுடன் சம்பந்தப்பட்ட தண்டுடன் இருந்தாலும் மலர் மேலே தனிப்பட்டு விளங்குகிறது. அவ்வாறே நாமும் நம்முடைய உற்றார் உறவினர்களுடனிருந்தாலும் மோகத்தை நீக்கி தனித்து இருத்தல் வேண்டும்.

குடும்பத்தில் இந்தச் சூழ்நிலை ஏற்படுவது கடினம் என்று சிலர் சொல்கிறார்கள். மருத்துவமனையில் குழந்தைகளைப் பேணிக்காக்கும் நர்ஸ் பற்றின்றி பணியாற்றுகின்றார். அவ்வாறே உலகில் அனைவரும் பரமபிதா பரமாத்மாவின் குழந்தைகள் என்று கருதி சாட்சியாக இருந்து அனைத்து காரியங்களிலும் ஈடுபட வேண்டும். நீதிபதியும் கூட சந்தோஷமான செய்தியையும் துக்கம் நிறைந்ததையும் பற்றி கேட்கிறார்; சொல்லுகிறார். ஆனால் அவற்றில் தான் மூழ்கிப்போவதில்லை. இன்பமும் துன்பமும் நிறைந்த சூழ்நிலையில் நாமும் சாட்சிகளாக இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். இவ்வாறு இருப்பதற்காகவே இராஜயோகத்தைப் பயில வேண்டும்.

# இராஜயோகத்தின் அடிப்படைவிதிகள்

சம்பூர்ண நிலையை அடைவதற்கும் ஆத்மீகத்தில் விரைவில் முன்னேறுவதற்கும் இராஜயோகத்தைத் தினந்தோறும் செய்து பழக வேண்டும். ஒவ்வொரு வேலையைச் செய்யும் போதும் பரமாத்மாவின் நினைவிலேயே செய்ய வேண்டும்.

இடைவிடாமல் இறைவனை நினைப்பதால் பயன் அதிகமாகக் கிடைப்பினும், உயர்ந்த நிலையை அடைய முக்கியமாக நேரம் செலவிட்டு அமர்ந்து யோகம் செய்ய வேண்டும். பரமாத்மாவை நினைக்கும் சமயத்தில் நாம் நம்முடைய புத்தியை ஒருமுகப் படுத்தி ஜோதிபிந்து சொரூபமான பரமாத்மாவிடம் நிலைக்கச் செய்ய வேண்டும். மனம் சஞ்சலப்படுவதால் காமம், குரோதம், மோகம், பேராசை, அகங்காரம் மற்றும் குருமார்களையும் நாடுகிறது. பரமாத்மாவிடம் மட்டுமே மனதை செலுத்த பழக்கப் படுத்திக் கொள்ள வேண்டும். தேகத்தையும், தேக சம்பந்தங்கள் அத்தனையையும் மறந்துவிட்டு ஆத்ம சொரூபத்தில் நிலைத்து புத்தியை ஜோதிபிந்து பரமாத்மா சிவபெருமானுடைய அன்பு நினைவில் நிலை நிறுத்துவதுதான் உண்மையில் யோகமாகும்.

யோகம் செய்வது மிகவும் கஷ்டம் என்று சிலர் நினைக்கிறார்கள். பலர் ஹடயோகங்களையும், தவத்தையும், பிராணாயாமத்தையும் செய்கிறார்கள். ஆனால் உண்மையில் யோகம் என்பது மிக எளிது. ஒரு பிள்ளைக்கு தன்னுடைய தந்தையின் ஞாபகம் எவ்வளவு சுலபமாக எப்போதும் இருக்கிறதோ அதேபோல ஆத்மாவுக்கும் ஆத்மாவின் தந்தையான பரமாத்மாவை நினைப்பது மிகவும் சுலபமாக இருத்தல் வேண்டும். நான் ஓர் ஆத்மா, ஜோதிமயமான ஆத்மா, பரமாத்மா சிவனின் அழியாத குழந்தை ஆத்மா நான், என் தந்தை பரமாத்மா, பிரம்மலோகத்தில் வசிப்பவர், சாந்திக்கடல் அவர்; ஆனந்தக் கடல் அவர், அன்புக்கடல், சர்வ சக்தி வானும் அவரே அவருடைய குழந்தை நான் என்று எப்போதும் நினைக்க வேண்டும். இவ்வாறு நினைத்து பரமபிதா இருக்கும் பிரம்ம லோகத்தில் மனதை நிலைக்கச் செய்து பரமாத்மாவின் திவ்ய குணங்களையும் கடமைகளையும் சிந்தனை செய்ய வேண்டும்.

மனம் இப்படி நினைத்து நினைத்துப் பழகினால் உலக சம்பந்தங்களின் மீதும் பொருட்களின் மீதும் எந்தவிதமான கவர்ச்சியும் இருக்காது. பரமாத்மா வால் கற்பிக்கப்படும் ஞானத்தில் எவ்வளவு நம்பிக்கை ஏற்படுகிறதோ அந்த அளவிற்கு உலக சிந்தனையும் லௌகீக சம்பந்தங் களின் நினைவும் வராமல் இருக்கும். நம்முடைய உண்மையான சொரூபமும் பரமபிரியமான பரமாத்மாவின் குணங்களும் அனுபவ மாகும். மனமானது ஆண்டவனிடம் நிலைப்பதில்லை என்றும் யோகம் செய்ய முடியவில்லை என்றும் பலர் சொல்கிறார்கள். ஆத்மா என்பதில் நிச்சயம் இல்லாமை தான் இதற்கு காரணம் மின்சாரம் பாயவேண்டு மானால் ரப்பர் உறையை நீக்கி விட்டு, உள்ளிருக் கும் கம்பியுடன் அதேபோன்ற மற்ற கம்பியை இணைத்தால் தான் மின்சாரம் பாயும். ஆகவே தேகத்தின் மீதோ, தேகத்தை தரித்த தேகதாரி மனிதர்களிடத்தோ அன்றி தேவதைகள் மீதோ ஞாபகம் கொண்டு பரமாத்மாவை நினைத்தால் அவருடைய நெருங்கிய அனுபவம் கிடைக்காது.

இரண்டாவதாக பரமாத்மாவுக்குப் பெயரில்லை: உருவமில்லை: அவர் எங்கும் நிறைந்திருக்கிறார் என்று நினைத்துக் கொள்கிறார்கள் இதனால் அவர்கள் மனதை எந்த ஒரு நிலையிலும் நிலை நிறுத்த முடியாது. பரமாத்மாவின் திவ்யமான இருப்பிடமோ பரந்தாமம் அல்லது பிரம்மலோகம் என்பது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அவ்விடத்தில் பரமாத்மாவிடம் மனதை நிலைக்கச் செய்ய முடியும்.

மூன்றாவதாக, பரமாத்மாவுக்கும் நமக்கும் உள்ள நெருங்கிய தொடர்பினைப் பற்றியும் அறியாமலிருப்பது. அதனால் அவரிடம் நெருங்கிய அன்பும் நட்பும் மக்களுக்குக் கிடையாது. இப்போது இவ் விஷயங்களைப் பற்றி தெரிந்து கொள்வதால் பிரம்மலோக வசியான ஜோதிர்மய பிந்துவான பரமபிரியமான பரமபிதா சிவனின் நினைவில் சதா நிலைத்திருக்க முடியும்.

# இராஜயோக விதி முறைகள்
# THE BASIS AND METHOD OF RAJAYOGA





இராஜயோகத்தின் தூண்கள்
PILLARS OF RAJA YOGA
சத்சங்கம்
DAILY SPIRITUAL CLASS
SHIVA
பிரம்மச்சரியம்
CELIBACY
உண்மையான யோகியின் வாழ்க்கை
பிரம்மச்சரியம்
சுத்த உணவு
தெய்வீக குணம்
சத்சங்கம்
காய்கறிகள்
கனிகள்
பால்
வெண்ணெய்
முட்டை
இறைச்சி
மதுபானம்
புகையிலை
அக நோக்குதல்
பணிவு
பொறுமை
பயமின்மை
தூய்மை
சகிப்புதன்மை
இனிமை
முக மலர்ச்சி
தெய்வீக குணம்
DIVINE VIRTUES
சாத்வீக உணவு
SATVIC FOOD
இராஜயோகத்தின் மூலம் விகர்மம் வினாசம்
BURNING PAST KARMIC IMPURITIES THROUGH RAJA YOGA
சூரியன்
கிரணங்கள்
எவ்வாறு லென்சு மூலம் சூரியக் கதிர்களை ஒருமுகப்படுத்தி பேப்பரை எரிக்கிறோமோ அவ்வாறே ஞானசூரியனின் நினைவு மூலம் ஆத்மாவின் பாவங்கள் எரிக்கப்படும்.
பேப்பர்

# இராஜயோகத்தின் தூண்களும் விதிகளும்

ஆத்மாவில் சாந்தி, ஆனந்தம், அன்பு தூய்மை, சக்தி மேலும் திவ்விய குணங்கள் நிறைய வேண்டும் என்பதற்காக ஆத்மாவை ஞானக் கடலும், சாந்திக்கடலும் ஆனந்தக் கடலும், அன்புக் கடலும் சர்வ சக்திவானும் பதீத பாவனருமான சிவபெருமானுடன் இணைப்பதே யோகத்தின் ஊண்மையான அர்த்தமாகும்.

மனதைச் சுத்தப்படுத்துவதும், எண்ணங்களை உயர்த்துவதும், மாற்றுவதும், மனம் எப்போதும் சந்தோஷமாக இருப்பதும் யோகத்தின் பலன் ஆனதால் யோகப் பயிற்சிக்கு சில விதிகளைப் பின்பற்றுவதும் மிகவும் முக்கியமானது. யோகத்தில் உயரவேண்டுமானால் அஸ்திவாரத்தூண்கள் பலமாக இருக்க வேண்டும்.

இவற்றில் பிரம்மச்சரியம், அல்லது தூய்மையே முதல் தூண் ஆகும். உடல் அழகு இந்திரிய சுகம் இவற்றிலிருந்து யோகியின் எண்ணம் நீங்கிவிடும். ஆத்மாவின் அழகுக்குத்தான் முதலிடம் கொடுப் பார். மனமானது பிரம்மத்தில் லயித்து ஆத்ம பற்றுதல் கொண்டு தேகப்பற்றுதலை மறந்துவிடு வார். பிரம்மச்சரியம் என்பதில் உண்மையாகவே நிலைத்திருப்பார். ஒவ்வொருவரையும் சகோதர சகோதரர்களாகக் கொண்டு ஆத்மீக அன்பிலும் நட்பிலும் இருந்து ஆனந்தமடை வார். நினைவி னாலும் பிரம்மச்சரியத்தினாலும் உடலில் சக்தியும், செயலாற்றும் சக்தியும், ஆத்ம சக்தியும் கிடைக் கின்றன. மனோ பலத்தை அதிகரிக்கும் நிர்ணய சக்தியும் மனம் எப்போதும் ஒரே நிலையில் இருக்கும் சக்தியும் கிடைக்கின்றன.

இரண்டாவது சாத்வீக உணவு என்னும் தூண், உண்ணும் உணவிற்கேற்ப மனமும் புத்தியும் அமையும் .வயிற்றை வளர்ப்பதற்காக மற்ற பிராணிகளைக் கொன்று மாமிசம் போன்றவற்றை உண்ண மாட்டார்கள். தகாத வழிகளில் பணமும் சம்பாதிக்க மாட்டார்கள். மதுபானம், முட்டை, புகைபிடிப்பது, புகையிலை போன்றவற்றைப் பயன்படுத்த மாட்டார்கள். உணவை பகவானுக்கு உகந்ததாகத் தயாரித்து , அவருக்கு அர்ப்பணித்துப் பின் அதைப் பிரசாதமாகக் கருதி உண்ணுவார்கள், இதன் காரணமாக மனம் சுத்தமடைந்து எண்ணங் கள் சிறந்தவைகளாகவும் மற்றவர்களின் நன்மைக் கானதாகவும் அமைகிறது.

மூன்றாவது தூண் சத்சங்கமாகும். எவ்வாறு சேர்க்கையோ அவ்வாறே நடத்தை என்ற பழ மொழிக்கு ஏற்றவாறு யோகிகள் சத்-சித் ஆனந்த சொரூபரான பரமாத்மாவுடன் தொடர்பு இருக்க வேண்டும் என்ற நினைவிலேயே இருக்கிறார்கள். தகாத நண்பர்கள், கதைப் புத்தகங்கள் கெட்ட சிந்தனைகள் போன்றவற்றில் நேரத்தை வீணாக்க மாட்டார்கள். அஞ்ஞானிகளைப் பற்றியோ, மற்ற சம்பந்தங்களைப் பற்றியோ நினைக்காமல் பிரபுவின் நினைவில் மட்டுமே மூழ்கிக் கிடப்பவர் கள் ஞானிகள்.

நான்காவது திவ்ய குணங்கள் என்னும் தூண். திவ்விய குணங்களாலும் தெய்வீக சிநதனை களாலும் கர்மங்களாலும் அகர்பத்தியைப் போல மணமெழுப்பிக் கொண்டிருப்பது யோகியின் தன்மை. அசுர சுபாவங்களையோ, அசுர கர்மங்களையோ பின்பற்ற மாட்டார்கள். பணிவு, ஆனந்தம், மலர்ந்த முகம், கம்பீரம், பொறுமை, உள்நோக்கு ஆகியவைகளே யோகத்தின் ஆதாரங்களாகும். இந்த நற்குணங் களை அடைந்து துன்பப்படும் மற்ற ஆத்மாக்களுக்கும் சாந்தி தேடித் தவிக்கும் ஆத்மாக்களுக்கும் தானே ஆதாரமாக இருக்கவும் செய்வார். உண்மையான யோகியானவர் தன் குணங்களை பிறருக்கு தானம் செய்து வாழ்க்கையில் நோய், சோகம், துன்பம், அமைதியின்மை போன்ற பூதங்களிலிருந்தும் விடுதலை அடைந்து சுகமாக வாழ்வார்.

# இராஜயோகத்தினால் அடையும் அஷ்ட சக்திகள்

இராஜயோகத்தினால் மனமானது பரமபிதா பரமாத்மாவிடம் இணைந்து அழியாத சுகத்தையும் சாந்தியையும் அடைவதோடு, பலவிதமான ஆத்ம சக்திகளையும் அடைகிறது. அவற்றில் முக்கிய மானவை, எட்டு. அவை சிறந்தன என்பதோடு மகத்துவமும் வாய்ந்தவை.

**கட்டுப்பாட்டுடன் பயன்படுத்தும் சக்தியே முதலாவது சக்தி.** ஆமை தேவையானபோது கர்மேந்திரியங்களைப் பயன்படுத்தி மற்ற சமயத்தில் எப்படி கட்டுப்படுத்தி விடுகிறதோ அதைப்போலவே யோகியும் கூட தன்னுடைய கர்மேந்திரியங்களைக் கட்டுப்படுத்தவும் பிறகு முக்கிய தேவைகளின்போது அவற்றைப் பயன்படுத்தவும் எப்போதும் சாந்தியுடனும் இருக்கவும் முடியும். எப்போதும் ஆத்ம அபிமானத்தில் இருப்பதால் மாயையின் எதிர்ப்பு இருக்காது.

இரண்டாவது **அடக்கிக்கொள்ளும் சக்தி.** இவ்வுலகம் ஒரு பயணிகளின் விடுதி என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். ஆனால் தம்முடைய வாழ்க்கையை விஸ்தரித்துக் கொண்டே இருந்து விடு கிறார்கள். தம்முடைய காரியங்களையும் புத்தியையும் சுறுக்கிக் கொள்ள இவர்களால் முடிவதில்லை. ஆனால் யோகி ஒருவருடைய புத்தியானது இப்பரந்த உலகில் அலையாமல் ஒரே ஒரு பரமபிதா பரமாத்மா விடம் ஆத்ம சம்பந்தம் மட்டும் கொண்டு நினை வெல்லாம் அவரிடமே நிலைத்து விடுகிறது. இக்கலி யுகத்திலிருந்து தம்முடைய (பெட்டி படுக்கைகள்) புத்தியையும் எண்ணங்களையும் அடக்கி எப்போதும் தம்முடைய வீடான பரந்தாமத்திற்குச் செல்வதற்கு தயாராகிறார்.

மூன்றாவது **பொறுமை சக்தி**. கல் எறிந்தாலும் இனிய பழத்தை ஒரு மரம் கொடுக்கிறது; அபகாரம் செய்பவர்க்கும் உபகாரம் செய்கிறது. அதைப்போல யோகியும் எப்போதும் அபகாரம் செய்பவர்க்கும் உபகாரம் செய்து நற்சிந்தனையும் நல்லெண்ணமும் கொண்டவராக இருப்பார்.

எதையும் **ஏற்றுக்கொள்ளும் சக்தி** என்பது நான்காவது சக்தி. மனிதனின் புத்தியானது யோகத் தினால் விசாலமடைகிறது. கம்பீரத்தையும் மதிப்பை யும் மரியாதையையும் வாழ்க்கையில் கடைப்பிடிப்பார். புகழ்ச்சியைக் கண்டு கர்வம் கொள்ளாமலும், குறை களைக் கண்டு துன்பப்படாமலும் இருப்பார். அவர் எப்பொழுதும் தெய்வீக குல மரியாதைகளில் கடல் போல் இருந்தும், தான் கம்பீரமாக இருந்தும் மற்ற ஆத்மாக்களின் குறைகளைக் காணாமல் குணங்களை மட்டுமே கண்டும் நடந்து கொள்வார்.

யோகத்தினால் கிடைக்கும் மற்றொரு சக்தி: **பகுத்தறியும் சக்தி.** பொற்கொல்லன் ஒருவன் நகைகளை கல்லில் உரைத்துப் பார்த்து உண்மை யையும் போலியையும் கண்டறிவது போல யோகி யாலும் மனிதர்களுடன் கூட இருந்து அவர்களிட முள்ள உண்மையையும் பொய்யையும் கண்டறிந்து கொள்ள முடியும். அஞ்ஞான மென்னும் பொய் யான கற்களிலிருந்து புத்தியை நீக்கி, ஞானரத்தினக் கற்களில் மட்டுமே தன் கவனத்தைத் திருப்புவார்.

யோகத்தினால் **நிர்ணயிக்கும் சக்தியும்** கூட தானாகவே கிடைக்கும் தகுந்தவற்றையும் தகாத வற்றையும் தானாக சீக்கிரத்தில் நிர்ணயிக்க முடியும். வீணான எண்ணங்களையும், மற்றவர்களைப் பற்றி அவதூறு பேசுவதையும் தவிர்த்து பிரபுவின் சிந்தனை யிலேயே இருப்பார்.

யோகத்தினால் எதையும் **சமாளிக்கும் சக்தியும்** கூட கிடைக்கிறது. உற்றார் உறவினர்களின் மரணத்தின் போதும், உலகில் பிரச்சனைகள் என்னும் புயல் எழும்போதும் கலங்காமல் இருப்பதால் தம்முடைய ஆத்ம ஜோதியை எப்போதும் எரிப்பதனால் மற்ற ஆத்மாக்களுக்கு ஞான ஒளியைக் கொடுப்பார்.

**ஒத்துழைக்கும் சக்தி** அடுத்ததாகும். தன் உடல் உழைப்பு, மனம், செல்வம் ஆகியவற்றால் ஈஸ்வரிய சேவை செய்வதனால் மற்ற ஆத்மாக் களின் ஒத்துழைப்பும் தாமாகவே கிடைக்கும். துன்பம் நிறைந்த கலியுகமென்னும் மலையை அப்புறப்படுத்து வதற்காக தூயவாழ்க்கை வாழ்வது என்ற ரீதியில் விரல் கொடுத்து அவர்களும் சொர்க்க ஸ்தாபனம் என்னும் மலைபோன்ற காரியத்திற்காக சகயோகிகளாகவும் ஒத்துழைப்பவர்களாகவும் ஆவார்கள்.

# இராஜயோகத்தின் மூலம் அடையக்கூடிய எட்டு (அஷ்ட) சக்திகள்




## ATTAINMENT OF POWERS THROUGH RAJAYOGA


RACE TOWARDS HEAVEN
இராஜயோக யாத்திரை மூலம்
சொர்க்கத்தின் பிராப்தி
சொர்க்கம்
HEAVEN
சிவ பரமாத்மா
ATTACHMENT
பற்று
அகங்காரம்
EGO
பேராசை
GREED
கோபம்
ANGER
காமம்
LUST
நரகம்
HELL

## இராஜயோகத்தின் யாத்திரை - சொர்க்கத்தை நோக்கிய பந்தயம்

இராஜயோகத்தை இடைவிடாமல் பழக்கப் படுத்திக்கொண்டால் ஒரு மனிதனுக்குப் பல சக்திகள் கிடைக்கின்றன. வரும் தடங்கல்களைப் பொருட்படுத் தாமல் ஆத்மீகத்துறையில் முன்னேறிச் செல்ல இச்சக்திகள் மிகவும் தேவை. இன்றைய மனிதனுக்குப் பலவிதமான நோய்கள்; வருத்தங்கள்; சிந்தனைகள்; துன்பங்கள்; போன்றவை நேர்ந்து இச்சிருஷ்டியையே நரகமாக்கி விட்டுள்ளது. இந்த நரகத்திலிருந்து விடுபட்டு, சொர்க்கத்திற்குப் போக வேண்டும் என்பதே ஒவ்வொருவரின் விருப்பமும் ஆகும். ஆனால் நரகத்திலிருந்து சொர்க்கத்திற்குச் செல்லும் வழியிலோ பல கல்லும் முள்ளும் நிறைந்துள்ளன. காமம், கோபம், பாசம், பேராசை, அகங்காரம் போன்றவை தடைகளாக இருக்கின்றன. இப்புரு ஷோத்தம சங்கமயுகத்தில் ஞானக்கடலான சிவ பரமாத்மா பிரஜாபிதா பிரம்மா மூலம் கற்பிக்கும் எளிய இராஜயோகத்தை நடை முறையில் பின்பற்றுவதால் இப்பஞ்ச விகாரங்களை வெல்ல முடியும்.

நரகத்திலிருந்து சொர்க்கத்திற்குப் போகும் வழியில் முதலில் காமவிகாரமென்னும் மதிற் சுவரைக் கடக்க வேண்டுமென்பது படத்தில் காட்டப்பட்டுள்ளது. கண்ணாடி மாளிகையாக இருக்கும் காம விகாரத்திலி ருந்து விடுபடுவதில் சிலர் வெற்றி அடைகிறார்கள். பலர் தேகப்பற்றினால் உந்தப்பட்டுக் கண்ணாடி மாளிகையில் மோதித் தூள்தூளாகிறார்கள். விகாரத்தில் விருப்பமும், எண்ணங்களும், பார்வைகளும் மதில் சுவரைக் கடக்கவிடாமல் செய்கின்றன. தூய்மையின் பார்வையினால் விகாரங்களை வெற்றி கொள்ளலாம்.

இரண்டாவது பயங்கரத்தடை, கோபம் என்னும் அக்னி சக்கரமாகும். கோபத்திற்கு வசப்படும்போது சரியாக தீர்மானிக்கும் சக்தியை இழக்கிறான். பொறாமை, பகைமை வெறுப்பு போன்றவையும் எழுகின்றன. இவற்றால் தானும் எரிந்து மற்றவர் களையும் எரித்துவிடுகிறான். இத்தடை களைக் கடக்க தான் சாந்தி சொரூபமான ஆத்மா என்று ஆத்மாவின் சுயதர்மத்தில் நிலைத்துவிட வேண்டும். சத்திய நெறியில் செல்லவிடாமல் தடுப்பது கோபமாகும். கருமித்தன முள்ளவராலும் மனதைப் பரமாத்மாவின் பக்கம் திருப்ப முடியாது. சாந்தியும், கிடைக்காது. சொர்க்கத்தை அடைய செல்வம் சேர்ப்பதில் இருக்கும் ஆசையை அறவே ஒழிக்க வேண்டும்.

பாசமென்பது ஒரு சிலந்தி வலை; பந்தபாசத்தில் ஈடுபட்டு மனிதன் தன்னுடைய தர்மத்தையும் கர்மத் தையும் மறந்து முயற்சி செய்யாமல் இருந்துவிடுகிறான் தேகத்தையும் தேக சம்பந்தங்களையும் மறந்து பாசவலையிலிருந்து நீங்கி ஒரே ஒரு பரமாத்மாவின் நினைவில் இருந்து உங்கள் கடமைகளை உணர்ந்து செய்யுங்கள் என்று கீதையில் பரமாத்மா நஷ்டமோகா, ஸ்மிருத்தி லப்தா என்ற வார்த்தைகளால் விளக்குகிறார். இதனால் சொர்க்கத்தைச் சேரலாம். மோகவலையிலி ருந்து விடுபட்டும் மற்ற மாயையின் பந்தங்களிலி ருந்தும் நீங்கினால்தான் சொர்க்கம் கிடைக்கும்.

மனிதனின் முன்னேற்றத்திற்கு மலை போன்ற அடுத்த தடை அகங்காரமாகும். அகங்காரமுள்ள மனிதனால் கடவுளை நெருங்க முடியாது. உயர்ந்த மலையிலிருந்து கீழே விழுந்து சுக்கல் சுக்கலாவது போல் மனிதன் அகங்காரத்தினால் வேதனைப் படுகிறான். இதையும் வெல்ல வேண்டும். விகாரங் களை விட்டொழித்தாலொழிய சொர்க்கம் கிடைக்காது என்பது நினைவிருக்கட்டும். இதை அறியாமல் யாராவது இறந்தால் சொர்க்கத்திற்குச் சென்றுவிட்டார் என எண்ணுவது தவறு. அங்ஙனம் இறந்தவர்கள் அனைவரும் சொர்க்கத்திற்குச் சென்று விட்டால் இங்கு ஜனத் தொகை குறைய வேண்டும் அல்லவா? ஆனால் அப்படிக் குறையக் காணோமே.

# தமிழ்நாடு, பாண்டிச்சேரி இராஜயோக நிலையங்களின் முகவரிகள்

**தமிழ்நாடு, பாண்டிச்சேரி மற்றும் தென்கேரள தலைமையகம்:** 'சாந்திதாம் ' பிளாட் நம்பர்.3702 Q-96, 3வது அவின்யு மெயின் ரோடு அண்ணா நகர், சென்னை 600 040, போன்: 044-26266765,

**சென்னை நகர முகவரிகள்:**
**அடையார்**
நெ.79, 3வது மெயின் ரோடு, கஸ்தூரிபாய் நகர், போன்: 044-24426660
**அசோக் நகர்:** எண். 13, வடிவேல் தெரு, ஜாஃபர்கான்பேட்டை, போன்:044-23712729
**பாரீஸ், இரத்தன் பஜார்**
15, 16, 3வது மாடி, நடியாசா, போன்: 044-25351084
**நுங்கம்பாக்கம்**
18, கிருஷ்ணமா சந்து, போன்: 044-28262627
**மயிலாப்பூர்:** 129/67, ஆர்.கே. மட் ரோடு, மந்தைவெளி போன்: 044-24936660
**கொடுங்கையூர்:** 402/F 6வது பிளாக், முத்தமிழ் நகர்,
**ப. வண்ணாரப்பேட்டை**
35/44 பாலு முதலி தெரு போன்: 044-25978189
**இராயப்பேட்டை**
14/17, வாயிட்ஸ் ரோடு, அவ்வை சண்முகம் முதல் சந்து போன்: 044-28117788
**ஆவடி:** நெ.6, நாகரத்தினம் தெரு, காந்திநகர் போன்: 044-26380083
**பூவிருந்தவல்லி**
நெ.4, புதிய தெரு, சாரதி நகர், போன்: 044-26494737
**மேற்கு தாம்பரம்**
49/9, ஜெயகோபல் நிவாஸ் வெங்கடேசன் தெரு, போன்: 044-22263955
**வேளச்சேரி** :ப.எண்.12, புஎண். 35A, மேட்டுத் தெரு, போன்: 044-42022004
**புரசைவாக்கம்**
29/16, சுந்தரம் தெரு, போன்:044-25321702
**சுங்குவார்சத்திரம்,**
ஹாப்பி வில்லேஜ், பொடவூர் ஸ்ரீபெரும்புதூர் மாவட்டம் போன்: 044-27192041,
**ஸ்ரீபெரும்புதூர்** 602 105
தியான ஆலயம், பைப்பாஸ் ரோடு, இராஜீவ் காந்தி நினைவாலயம் அருகில், போன்: 044-27107009

**<u>தமிழக முக்கிய கிளைகள்:</u>**
**அரக்கோணம்:** 631 001
3 வெள்ளைக் குளம் தெரு, காந்தி ரோடு,
**அருப்புக்கோட்டை** 626 101
சிவாலயம், 47, மேல ரத வீதி, வெள்ளைக்கோட்டை போன்: 04566-222433
**செங்கல்பட்டு** 603 001
8A/12, 6வது குறுக்குத் தெரு, அண்ணாநகர் போன்: 044-27430872
**கடலூர்** 607 002
10/15, முதல் குறுக்குதெரு, சரஸ்வதி நகர், திருப்பாதி புலியூர் போன்: 04114-235775
**கோயம்புத்தூர்**-641 004
சுகசாந்தி பவன், 89, ஜீவா தெரு, பி.ஆர்.புரம், பீளமேடு, போன்:0422-2593640
**கோயம்புத்தூர்:** 641 025
இராஜயோக பவன் Dr. அம்பேத்கார் ரோடு, பக்தசிங் 3வது தெரு, காந்தி நகர், வேலாண்டிபாளையம் போன்:0422-2430532
**சிதம்பரம்** 608 001
3A, VKP கோவில் தெரு, போன்: 04144-223048
**தர்மபுரி:** 636 701
ASTC பஸ் செட் சந்து கிருஷ்ணகிரி ரோடு, போன்: 04342-266141
**திண்டுக்கல்** 624 003
3/26, முத்து நகர், திருச்சி ரோடு, போன்: 0451-2427264
**ஈரோடு:** 638 001
24/1 பட்டேல் தெரு, போன்: 0424-2252738
**காஞ்சிபுரம்** 631 503
40/38A கருக்கினில் அமர்ந்தவள் கோயில் தெரு, போன்: 044-27232196
**கரூர்:** 639 001 23/1 செங்குந்த புரம், 7வது குறுக்கு தெரு, போன்: 04324-231572
**கோவில்பட்டி:** 628 501
44C/1 வெங்கடேஷ் நகர் முதல் தெரு, போன்: 04632-225660
**கிருஷ்ணகிரி** 635 013
சிவ குடில், 36M சாந்தி நகர் போன்: 04343-236738
**கும்பகோணம்** 612 001
17/10. செல்வசாரங்கபாணி தெரு போன்: 0435-2420002
**கோடைக்கானல்** 624 102
5/239, C-4, ஆனந்தகிரி 4வது தெரு, போன்: 04542-241858
**மதுரை** 625 017
விஷ்வசாந்தி பவன், 36, மீனாட்சி நகர், P & TNagar Back side Ph :0452-2640315
**மதுரை** - 625 001
40, சம்பந்த மூர்த்தி தெரு, மேற்கு மாசிவீதி Ph:-2349477
**மயிலாடுதுறை** 609 001
6/2, பட்டமங்கலத் தெரு, ரஹமத் பில்டிங் முதல் மாடி, போன்: 04364-223197
**மேட்டூர் அணை** 636 401
ஒடிபி கிரானைட் பங்களா, போன்: 04298-242026
**மறைமலை நகர்** 603 209
அமைதி இல்லம், No.6, MIG, NH-1, போன்: 044-27455069
**நாகர்கோவில்** 629 003
4-66-D/8 பிருந்தாவன், வேணுகோபால்சாமி நகர் 2வது தெரு பார்வதிபுரம் போன்: 04652-259719,
**நாகர்கோவில்** 629 00184/26,
வெள்ளாளர் மேற்கு காலனி, இராமவர்மபுரம், போன்:04652-225063
**நாமக்கல்** 637 001
25, பழைய முனிசிப் கோர்ட் தெரு, போன்: 04286 -224460
**நாகப்பட்டிணம்** 611 001
26/2 வ.உ.சி. தெரு, போன்: 04365-224550
**நெய்வேலி** 607 803
D-11 19வது பிளாக், ஸ்வீடிஷ் ரோடு, போன்: 04142-229667
**உதகமண்டலம்**
88 எட்டின்ஸ் ரோடு, விக்டோரியா ஹால் போன்: 0423-2441866
**பாண்டிச்சேரி** 605011
12, 45வது அடி ரோடு, வள்ளலார் சாலை (விரிவு), பாலாஜி நகர்,Ph: 04132-2243576
**புதுக்கோட்டை** 622 003
1164, பெரியார் நகர், இராஜகோபாலபுரம், போன்: 04322-262335
**பட்டுக்கோட்டை** - 641 601
VMT பங்கஜ இல்லம், 2A, வடசேரி ரோடு, போன்: 04373-254691
**இராஜபாளையம்** 626 117
148A, ஸ்ரீரெங்கபாளையம், P.A.C.R. சாலை ரோடு, போன்: 04563-222762
**இராமேஷ்வரம்** 623 526
91 நடுத்தெரு, போன்: 04573-221450
**சேலம்** 636 009
336/1 குப்தா நகர் 7வது குறுக்கு தெரு, அங்கம்மாள் காலனி, போன்: 0427-2448532
**சிவகாசி** 626 123 சிவதர்ஷன் பவன், சசிநகர், சித்துராஜபுரம் போன்: 04562-250123
**சிவகங்கை** 623 560
33/75, வ.உ.சி தெரு,
**தஞ்சாவூர்** 627 007
2/10A தமிழ் நகர் 4வது தெரு, மருத்துவக்கல்லூரி ரோடு போன்: 04362-242767
**திண்டிவனம்** 604 001
14ஆ இராஜாஜி சாலை போன்: 04147-223491
**திருச்சிராப்பள்ளி** 620 018
சாந்தி குடில், 3, பெரியத் தெரு, உறையூர் போன்: 0431-2750111
**திருநெல்வேலி** 627 001
13, இராஜேஸ்வரி நகர், பெருமாள்புரம் போன்: 0462-2331873
**திருப்பத்தூர்** 635 601
25சி டாக்டர் சீனிவாசன் தெரு, போன்: 9788272088
**திருப்பூர்** 641 602
10/119 ஓம்சாந்தி பவன், ஏ.பி. நகர், காந்திநகர் போன்: 0421-2475957
**திருவண்ணாமலை** 606 601
50, ஓம் சாந்தி தெரு, தண்டராம்பேட் மெயின் ரோடு தேனிமலை, போன்: 04175-236092
**திருவள்ளூர்** 602 001
10, 3வது தெரு, கே.கே.நகர், மணவாளநகர், போன்: 044-27641911
**தூத்துக்குடி** 628 003
குளோபல் ரிட்ரீட் சென்டர், 3/113-சி, தபால்-தந்தி காலனி, 12வது தெரு, (மூன்றாம் கல் அருகில்) போன்: 0461-2310900
**உடுமலைப்பேட்டை**
10/9. ஆசாத் வீதி போன்: 04252-220829
**வேலூர்** 632 001
136, GCM தெரு, அரசமரம் பேட்டை, போன்: 0416-2235963
**விழுப்புரம்** 605 601
218, காமராஜர் தெரு, ஸ்ரீநிவாச நகர், சாலமேடு போன்: 04146-224718
**விருத்தாசலம்** 606 001
K.B. Nair Castle, F-8, சரோஜினி நகர், போன்: 04143-264382
**விருதுநகர்** 626001
சிவஜோதி பவன், சிவஜோதி நகர், பி.ரு. ஜெகதம்பா சாலை போன்: 04562-265005

# பிரஜாபிதா பிரம்மா குமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயத்தின் சில முக்கிய சேவை நிலையங்கள்



ஓம்சாந்தி பவன், மவுண்ட் அபு, இராஜஸ்தான்.



ஞானசரோவர், மவுண்ட் அபு, இராஜஸ்தான்.




டைமண்ட் ஹால், சாந்திவன், அபுரோடு, இராஜஸ்தான்




பிரம்மகுமாரிகள் ரிட்ரீட் சென்டர், ஹாப்பி வில்லேஜ், பொடவூர், தமிழ்நாடு






தபஸ்யாதாம், சாந்திவன், அபுரோடு, இராஜஸ்தான்




தியான ஆலயம், ஸ்ரீபெரும்புதூர், தமிழ்நாடு




தமிழ்நாடு தலைமையகம் சாந்திதாம், அண்ணாநகர், சென்னை

# இராஜயோகத்தின் மூலம் தெய்வீக குணங்கள்
# DIVINE VALUES THROUGH RAJYOGA





**பிரஜாபிதா பிரம்மாகுமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்தியாலயம்**

அகில உலகத்தலைமையகம்: பாண்டவபவன், மவுண்ட் அபு, இராஜஸ்தான்

தமிழக தலைமையகம்: "சாந்திதாம்", Q-96, 3வது அவினியு,

அண்ணாநகர், சென்னை-600 040. போன்: 26266765, 26267441